பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 23 திங்கட்கிழமை (06.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# பொதுநலவாய மாநாட்டை நடத்த இலங்கைக்கு உதவியது இந்தியா!

## சந்தர்ப்பம் பார்த்து காய் நகர்த்தியது டில்லி

(கொழும்பு)

பெர்துநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் பாரிய வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை, இந்தியாவின் மகத்தான உதவி பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை நடத்துவதற்கான மிகப்பெரிய வாய்ப்பை இலங்கைக்கு அளித்துள்ளதாக சிலோன் ருடே எனும் ஊடகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயத்தில் தனது நலன்களுக்காக அரசாங்கத்தை இந்தியா எப்படிப் பாதுகாத்தது என்பதையும், அதற்கு எவரெவர் ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்பதையும் இவ் ஊடகத்தின் பத்தி எழுத்தாளரான உபுல் ஜோசப் பெர்னாண்டோ தனது கட்டுரையில் விபரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டால் பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கை குழுவின் கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்க முடியும் என இந்தியா கொழும்பிடம் உறுதியளித்திருந்தது.

இந்நிலையில், பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைகள் குழுவின் கூட்டத்துக்கு சில தினங்கள் முன்னதாக வட மாகாண சபைக்கான தேர்தல் செப்ரெம்பர் மாதம் நடை (19ஆம் பக்கம் பார்க்க)

## இந். முன்னாள் தூதுவர் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் அசோக் கேகாந்தா இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார் என யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் இன்று காலை 8.30 மணியளவில் வந்திறங்கும் இந்திய உயர்ஸ்தானிகர் யாழ்மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவை பலாலி படைத்தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். பின்னர் முற்பகல் 10.30 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகப் பணிகளையும் சென்று பார்வையிடவுள்ளார்.

இதன் பின்பு யாழ்.நகர்ப் பகுதிக்கு வருகை தரும் அவர், பல் [illegible] தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (எ-6)

## உயர்தரப்பரீட்சை 5 இல் ஸ்கொலசிப் 25 இல்

(கொழும்பு)

2013ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி தொடங்கும் பரீட்சை, 31ஆம் திகதிவரை இடம்பெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

அத்துடன் இவ்வருடத்திற்கான ஐந்தாம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சை ஓகஸ்ட் 25ஆம் திகதி இடம்பெறும் என அவர் குறிப்பிட்டார். (எ-11)

## அரசியலில் ஈடுபடுவதற்கு முன்னாள் போராளிகள் ஆர்வம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் அரசியலில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள் ஆர்வம் காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இவ்வாறு அரசியலில் ஈடுபட முனைப்புக் காட்டி வருவதாகத் தெரிவித்தார்.

மாகாண சபை, உள்ளூராட்சி மன்றம், பிரதேச சபை போன்ற தேர்தல்களில் குறித்த புலி உறுப்பினர்கள் களமிறக்கப்படுவர்.

எவ் (19ஆம் பர்க்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபை தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேவை


### அமைச்சர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தல்

(கொழும்பு)

சர்வதேச கண்காணிப்பின் கீழ் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என எதிர்க் கட்சிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்று அக்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கையை சாதகமான முறையில் பரிசீலித்து தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான போராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயத்தில் ஆளும் மற்றும் எதிர் தரப்பினரிடையே ஏற்படும் இணக்கப்பாடுகளுக்கமைய பக்கச்சார்பற்ற முறையில் மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய சர்வதேச கண்காணிப்பாளர்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கண்காணிப்பின் கீழ் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்என தேர்தல் ஆணையாளரிடமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் கோரிக்கைகளை முன்வைத்துவரும் நிலையில் ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகளும் இதனை வலியுறுத்தியுள்ளனர். (எ-11)



## உயிர் பிரிந்தாலும் பரவாயில்லை விடுதலை செய்யும்வரை உண்ணாவிரதம்

### அசாத் சாலி விடாப்பிடி



(கொழும்பு)

உடலை விட்டு உயிர் பிரிந்தாலும் பரவாயில்லை; என்னை விடுதலை செய்யும்வரை உணவையோ, மருந்தையோ உட்கொள்ளப் போவதில்லை என கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அசாத் சாலி தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தான் (19ஆம் பர்க்கம் பார்க்க)

## 4500 சொகுசு அறைகள்; 200 குண்டு துளைக்காத வாகனங்கள்

# பொதுநலவாய மாநாட்டுக்கு 350 கோடி ரூபாய் செலவாக மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டுப் பிரமுகர்களை தங்கவைப்பதற்கு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள நட்சத்திர விடுதிகளில் 4 ஆயிரத்து 500 சொகுசு அறைகள் முன்கூட்டியே ஒதுக்கப்படவுள்ளன.

அதேவேளை, இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் முக்கிய பிரமுகர்கள் பயணிப்பதற்கு குண்டு துளைக்காத அதி நவீன சொகுசு வாகனங்கள் 200 இறக்குமதி செய்யப்படவுள்ளதுடன் இரண்டு நாட்கள் கொழும்பில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு 350 கோடி ரூபாய் செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 54 நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சிமாநாடு எதிர்வரும் நவம்பர்மாதம் 15ஆம் திகதி முதல் 17வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் பொதுநலவாய (19ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற காலநிலை தொடரும்!

(கொழும்பு)

நாடு முழுவதும் தொடர்ந்தும் காலை வேளையில் மழை பெய்யும். மலையகப் பிரதேசங்களில் மாலை வேளைகளில் கடும் காற்றுடன் மழை பெய்யுமென வானிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது.

இக் காலநிலை இம்மாதம் முழுவதும் தொடருமெனவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது. (எ-11)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாத் சாலியை தடுத்துவைக்க உத்தரவு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் அசாத் சாலியை மூன்று மாதங்களுக்கு தடுத்து வைப்பதற்கான உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தடுப்புக்காவல் உத்தரவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதவானிடம் நேற்று பெற்றுக்கொண்டுள்ளனர். (எ-11)

# சிங்கள மீனவர்களின் அத்துமீறல்களுக்கு கடற்படையினர் ஒத்துழைப்பு!

## முல்லை. மாவட்ட மீனவர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களில் சிங்கள மீனவர்களின் அத்துமீறல்களுக்கு கடற்படையினர் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதாக தமிழ் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்துடன், அத்துமீறி வந்து தங்கியிருந்து தொழில் புரியும் சிங்கள மீனவர்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கும் கடற்படையினர் இடையூறாக இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த வாரம் மாத்தளன் பகுதியில் 2 பாரிய படகுகளில் வந்திறங்கிய 20ற்கும் மேற்பட்ட சிங்கள மீனவர்கள் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் ஒப்புதலுடன் தங்கியிருந்து கடற்றொழில் செய்ய முயற்சித்தனர்.

ஆனால் பிரதேச மக்களுடைய ஒப்புதல் இல்லாமல் தங்கியிருந்து தொழில் செய்ய முடியாது என கூறிய மக்கள், பெற்றோல் போத்தல்களுடன் நின்று எதிர்ப்புத் தெரிவித்ததுடன், சிங்கள மீனவர்கள் தங்கியிருந்து தொழில் புரிய நினைத்தால் அனைவரையும் தீயிட்டுக் கொளுத்துவோம் எனவும் கூறி விட்டனர்.

இந்நிலையில் விடயத்தில் தலையிட்ட கடற்படையினர் தமிழ் மக்களை சமாதானப் படுத்தியதுடன், சிங்கள மீனவர்களை அங்கிருந்து வெளியேற்றி விட்டனர்.

அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் மீண்டும் கடற்படையினரால் அழைத்து வரப்பட்டு கடற்புலிகளின் தளம் அமைக்கப்பட்டிருந்த சாலைப் பகுதியில் கடற்படையினரின் பாதுகாப்பு பிரதேசத்தினுள் தங்கியிருந்து தொழில் செய்வதற்கு கடற்படையினர் அனுமதியளித்திருக்கின்றனர்.

இந்நிலையில் அவர்கள் இலங்கையில் கடல்வள பாதுகாப்புச் சட்டத்தின் படி தடை செய்யப்பட்ட தொழில்கள் அனைத்தையும் பயன்படுத்தியே கடற்றொழில் செய்து வருகின்றனர்.

இதனால் தொழிலை இழக்கும் பிரதேச தமிழ் மீனவர்கள் வாழ்வாதார ரீதியாக பாதிக்கப்படுவதாக தமிழ் மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது மட்டுமல்லாமல் கொக்கிளாய், முகத்துவாரம், நாயாறு, சாலை, புலிபாய்ந்தகல் போன்ற பிரதேசங்களில் யுத்தத்தின் பின்னர் வந்து தங்கியிருந்து கடற்றொழில் செய்யும் தென்னிலங்கை சிங்கள கடற்றொழிலாளர்கள் அனைவரும் கடற்படையினரின் பாதுகாப்பின் கீழேயே கடற்றொழில் செய்து வருகின்றனர்.

குறிப்பாக நாயாறு பகுதிகளில் தங்கியிருந்து கடற்றொழில் செய்யும் சிங்கள மீனவர்களுக்கு ஆயுதம் தாங்கிய கடற்படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

மேலும் இவ்வாறான சிங்கள மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சிடம் பிரதேச தமிழ் மீனவர்கள் பல தடவை சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதன் போது அத்துமீறியிருக்கும் சிங்கள மீனவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு அமைச்சு பணித்த போதும் அவர்களை வெளியேற்றுவதற்கு கடற்படையினர் இடையூறாக இருப்பதாக தமிழ் மக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர் (எ-11)


# முக்கிய அறிவித்தல்

KML Cables (pvt) Ltd நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதியாக யாழ்.மாவட்டத்தில் (யாழ்-2) செயற்பட்டு வந்த செல்வராஜா அஜந்தன் (தே.அ.அ. இல.871194700v)(முள்ளியவளை/கிளிநொச்சி) எனது விநியோகத்தில் இருந்து உடனடியாக விலக்கப்பட்டுள்ளார். எனவே, இவருடன் எமது நிறுவனம் சார்பாக எதுவிதமான கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள வேண்டாமெனவும் அதற்கு நாம் பொறுப்பாளிகள் இல்லை என்பதையும் அறியத் தருகின்றோம்.

இ.ஜனார்த்தனன்
விநியோகஸ்தர்
யாழ்-2 KML Cables (pvt) Ltd

(2547)

# சைப்பிரஸ் சம்பாதிக்க சௌகரியமான நாடு

O/L போதும் – 21 வயதிற்குட்பட்டவர்களிற்கு.
26 வயதிற்குட்பட்டவர்களிற்கு A/L தேவை.
நீங்கள் கற்க பின்னடிக்கும் IELTS தேவையே இல்லை.
படித்துக் கொண்டே கைநிறைய பணம் ஈட்டலாம்.

விரைந்து வாருங்களேன்!

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



(சி-3234)


# மரண அறிவித்தல்

## திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம்

(ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை புகையிரத திணைக்களம்.)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம் அவர்கள் 04.05.2013 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளை திருச்செல்வம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மற்றும் திரேசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மகனும் நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சவரிமுத்து மனுவேற்பிள்ளை இசபெல்லா தம்பதிகளின் அன்பு மருமகனும் சுகிர்தம் மரியநாயகியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற யேசுரட்ணம் (Subt.Small industries Atchuvely), மங்களநாதன்(ஓய்வுபெற்ற ஆசிரியர், St.Hentry's College), மதுரநாயகி தவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, அவுஸ்திரேலியா), Rev. F.r. தேவராஜன் (ராஜன்), லண்டன், தர்மபாலன்(லண்டன்),அமிர்தராணி, அலோசியஸ் (இளைப்பாறிய ஆசிரியை-புத்தளம்), T.X.தேவமனோகரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற Dr.மங்களநாயகம்(சுவீடன்), மதுரநாயகம்(பிரான்ஸ்),தேவநாயகம்(USA) முன்னாள் கெயின்ஸ் கல்வி நிலைய இயக்குநர், மன்மதநாயகம் (மன்னண்ணா) சமாதான நீதவான் (நெல்லியடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 07.05.2013 (செவ்வாய்க்கிழமை பி.பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பூதவுடல் கரவை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் கரவை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ம.ம.மன்மதநாயகம்
(மைத்துனர்)
தொடர்பு: 077 0267711

1 ஆம் குறுக்குத் தெரு,
நெல்லியடி, கரவெட்டி.

(சி-3233)

# லயன் எயார் விமானத்தின் கறுப்புப் பெட்டியை மீட்கவில்லை

## பொலிஸார் தெரிவிப்பு

14 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக நம்பப்படும் லயன் எயார்-அன்டனோவ் 24 ரக உள்ளூர் பயணிகள் விமானத்தின் சிதைவடைந்த பகுதிகளுடன் மனித எலும்புக்கூடுகள், ஆடைகள், செருப்புகள் இதயத்துடிப்புமானி மற்றும் தங்கப் பல் ஒன்றின் ஒரு பகுதி போன்றன மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி விமானத்தின் கறுப்புப் பெட்டி இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக நம்பப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் அதனை எடுத்துச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

சுழியோடிகள், கடலுக்கு அடியில் சுமார் 30 அடி ஆழத்தில் இருந்து மேற்படி விமானத்தின் பாகங்களை மீட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (எ-11)

# கனடா இளைஞன் கொலை மற்றொரு இளைஞன் கைது

நயாகரா ஆற்றங்கரையோரத்தில் மீட்கப்பட்ட 21 வயதான சத்யராஜ் மகேந்திரன் என்ற கனடாவின் தமிழ் இளைஞனின் சடலம் தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

கனடாவில் கிரேட்டர் டொரண்டோ நகரில் வசித்து வந்தவர் சத்யராஜ் மகேந்திரன் (வயது21). தமிழரான இவரை கடந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி காணவில்லை.

அதே நாளில், நயாகரா நீர்வீழ்ச்சி அருகே உள்ள ஆற்றங்கரையோரத்தில் அவரது உடல் ஒதுங்கியது. இந்த சம்பவம் தொடர்பாக நயாகரா பொலிஸார் கடந்த 13 மாதங்களாக விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், மகேந்திரன் கொலை செய்யப்பட்டதாகவும், அவரை அவருடைய நெருங்கிய நண்பரான மற்றொரு தமிழன் தினேஷ் சுந்தரலிங்கம் (வயது 23) கொலை செய்ததாகவும் கண்டுபிடித்தனர்.

அதையடுத்து சுந்தரலிங்கத்தை அவரது வீட்டில் வைத்து கைது செய்தனர்.

விசாரணை தொடர்ந்து நடந்து வருவதாகவும், மேலும் சிலர் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ- 11)

# பதில் வைத்தியர்கள் இன்று போராட்டம்

இலங்கையில் அரச பதியப்பட்ட மற்றும் பதில் வைத்தியர்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

தொடர்பாடல் கொடுப்பனவு வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக அரச பதியப்பட்ட மற்றும் பதில் வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச பதியப்பட்ட மற்றும் பதில் வைத்தியர்கள் ஏப்ரல் 8 ஆம் திகதி தொடக்கம் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன் பின் மேலதிக சேவைகளில் இருந்தும் விலகினர்.

எனினும் தமது கோரிக்கைக்கு இதுவரை தீர்வு வழங்கப்படாததால் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அரச பதியப்பட்ட மற்றும் பதில் வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (எ-11)


# தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து
Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)


# பெயர் மாற்றம்

மானிப்பாய் வீதி, தாவடியில் வசித்து வரும் நவரத்தினம் சுகிகரன் ஆகிய நான், இன்றிலிருந்து **நவரத்தினம் சுகீகரன்** எனப்பெயர் மாற்றம் செய்கிறேன் என்பதையும் நான் இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதையும் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

நவரத்தினம் சுகீகரன்

(2546)


செல்லா சினிமா யாழ்ப்பாணம்




சிவகார்த்திகேயன், தனுஷ், நயன்தாரா மற்றும் பலர் நடிப்பில்

10.30, 2.30, 6.30, 9.30


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உலகம் நல்லதா? கெட்டதா?

உலகம் மிகவும் கெட்டுப் போச்சு சேர்; அந்தக் காலத்தில் எல்லாம் இது மாதிரி அக்கிரமம் நடக்குமா? என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

இந்த உலகம் மிகவும் முன்னேறியிருக்கிறது சேர்; அடுத்த கிரகத்துக்கே போய் வீடு கட்டலாமா? என்று யோசிக்கும் அளவுக்கு வந்து விட்டோமே! என்று நினைப்பவர்களும் உண்டு.

அது சரி! உண்மையாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா?சற்று நிதானமாக யோசித்து பாருங்கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா?

அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வரவில்லையானால் அதற்காக கவலைப்பட வேண்டாம். வாருங்கள் இராமகிருஷ்ணரிடம் போவோம்.

அவர் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார். ஒரு சிறிய கதை மூலமாக;

"உலகம் நல்லதா? கெட்டதா?" என்று ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார். அதற்கு அந்தப் பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து,

அதற்கு நான் " பதில் சொல்கிறேன். அதற்கு முன் நான் ஒருகேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்" என்றார்.

" சரி கேளுங்கள்" என்றார் அவர்.

" பூனைக்குப் பல் இருக்கிறதே அது நல்லதா கெட்டதா?" என்று கேட்டார் இவர்.

இதைக்கேட்டதும் அவர் புலம்ப ஆரம்பித்தார்.

" என்னது? நம் உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டோம். அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று நம்மிடமே திருப்பிக் கேட்கிறாரே! என்று யோசித்தார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதன்பின் அந்தப் பெரியவர் அதற்கு விளக்கமளித்தார்.

"ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா கெட்டதா என்று கேட்டால் என்ன பதில் வரும்? யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்கிறோமோ அதற்குத் தகுந்த மாதிரித் தான் பதில் வரும்"

பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று அந்தப் பூனைக் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

" எங்கள் அம்மாவிடம் இருக்கிறது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்தப் பல்லால் தான் எங்கள் அம்மா என்னைக் கௌவித் தூக்கிக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு போவார். அது இல்லையென்றால் நான் இல்லை" என்று தான் குட்டிப் பூனை பதில் சொல்லும்.

ஆனால் இதே கேள்வியை ஒரு எலியிடம் கேளுங்கள். அது என்ன சொல்லும்?

"பல்லா அது எமன்! கடவுள் பூனையை படைத்ததோடு விட்டிருக்கக்கூடாதா? அதற்கு பல்லையும் எதற்குப் படைத்தார் குத்தூசி மாதிரி! அந்தப் பல்லின் கொடுமை என்னவென்பது கடிபடும் எனக்குத்தானே தெரியும்" என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டிப்பூனை பார்க்கின்ற பார்வை ஒரு மாதிரி! எலி பார்க்கிற பார்வை ஒருமாதிரி.

அதேமாதிரித்தான் இந்த உலகம் நல்லதா –கெட்டதா என்று கேட்டால்..." இந்த உலகத்தின் தன்மையைக் பார்க்கின்றவர்களைப் பொறுத்தது அது.

இந்த உலகம் உள்ளவரைக்கும் இதை நல்லது என்று சொல்பவர்களும் இருப்பார்கள். கெட்டதென்று சொல்பவர்களும் இருப்பார்கள்.

எப்போதும் சந்தோசமாக இருக்கின்ற இரண்டு பேர் சந்தித்துக் கொண்டார்கள். உங்கள் சந்தோசத்திற்கு என்ன காரணம்? என்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விசாரித்துக் கொண் டார்கள்.

" என் அத்தை மகள் என்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அதுதான் நான் சந்தோசமாக இருக்கிறேன்" என்றார் ஒருவர்.

" என்னுடைய அத்தை மகள் என்னை கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அது தான் நான் சந்தோசமாக இருக்கிறேன் என்றார் இன்னொருவர்.இரண்டும் இரண்டு விதமான பார்வை!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இனங்களுக்கிடையிலான கலாசார உணர்வை வலிந்து திணிக்கக்கூடாது

## பேராசிரியர் தி.வேல்நம்பி

(யாழ்ப்பாணம்)

இனங்களுக்கிடையிலான கலாசார பண்பாட்டு உணர்வுகளை வலிந்து ஏற்படுத்தக்கூடாது. அவை உள உணர்வு ரீதியாக ஏற்படவேண்டும் என யாழ். பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதியும், பேராசிரியருமான தி. வேல்நம்பி தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினரின் யாழ்ப்பாண வாழ்வியல் என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த மே 2 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு எம்முடைய பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணம் வாழ்வியல் என்ற கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. அதனையொட்டி ஆய்வு அரங்குகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

மனித வாழ்வியலைப்பற்றி சங்க காலம் முதல் இன்று வரை பேசாதவர்களில்லை.

இந்த வாழ்வியல் பற்றி பல ஆவணப் பதிவுகளை எம்முடைய சமூகம் எம்முன் வைத்திருந்தது.

இவை ஆவணங்களாக எம் மத்தியிலே வைக்கப்பட்டதன் காரணத்தால் தான் நாம் எமது பண்டைய வாழ்வியலையும் எம்க்கென்று இருந்த பண்பாட்டையும் கலாசாரத்தையும் அறிந்து அதற்கமைய நமது வாழ்வைசெம்மைப் படுத்தக் கூடியதாக இருந்தது.

எங்களுடைய தமிழ்ச்சமூகம் போருக்குப் பிற்பட்ட காலச் சூழலில் பல்வேறு திசைகளிலும் சென்று தமது வாழ்வை அமைத்துக் கொண்டு இருந்த சந்தர்ப்பத்தில் இந்தப் பிரதேசத்தில் நம் முடைய பண்பாடு கலாசாரம் சீரழிந்து விட்டதோ அல்லது சீரழிந்து விடுமோ என்று பலரும் ஆதங்கப்பட்டு பேசிக் கொண்டு இருந்தவொரு காலத்தில் இந்த யாழ்ப்பாண வாழ்வியல் என்ற கண்காட்சி நடத்தப்பட்டது.

நாங்கள் வாழ்வியலைப் பற்றி, வாழ்க்கை முறைகளைப் பற்றி பேசி விட்டு, செல்வதோடு நின்று விடாது அந்த விடயங்களை ஆவணங்களாக பதிவு செய்யவேண்டும்.

அந்தநோக்கில் இன்று யாழ்ப் பாண வாழ்வியல் வெளியிட்டுள்ளது. இந் நூல் நிச்சயமாக இன்னும் பல ஆண்டுகளுக்கு பின்னரும் எம்மவர்களுக்கு எமது வாழ்வியலை நினைவுபடுத்திக் கொண்டிடேயிருக்கும். வாழ்வியலைப் பற்றி பேசுகின்ற போது பலரும் எங்களுடைய பண்டைய கால பண்பாடு கலாசாரம் எப்படி இருந்தது?

அவற்றை நாங்கள் எப்படிக் காக்க வேண்டும், எப்படி அந்த கட்டமைப்புக் குள் இருந்து செயற்பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்ப டுகின்றன.

ஆனால் அதற்குள்ளே நிகழ்கின்ற காலமாற்றங்கள் அச்சிந்தனைகளைக் குழப்பி விடுகின்றன. ஆயினும் அம்மாற்றங்களை எவ்வாறு சீர்செய்ய முடியுமென்ற கருத்துக்கள்கூட எங்களிடம் இருக்கின்றன.

ஆகவே இந்த அடிப்படையில் அதனை அகவயமாகவும் புறவயமாகவும் நோக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

எங்களுடைய அக வகையில் எங்களுக்குள்ளே இருக்கின்ற உணர்வு ரீதியான எமது பண்பாடு பெரியளவில் கெட்டுப்போகவில்லை. எனவே எமது பண்பாட்டை இன் னும் சீரழியவிடாது உணர்வு ரீதியாக கட்டமைப்புக்களை ஏற்படுத்தி கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு இவ்வாறான நிகழ்வுகள் மிகவும் பொருத்தமாக அமையும்.

மேலும் எந்த ஒரு சமூகத்தினதும் பண்பாடு மற்றும் கலாசாரம் பற்றி பேசுகின்ற போது அந்த சமூகத்தினுடைய மொழியை புறந்தள்ளி விடமுடியாது.

இவை எல்லாவற்றுக்கும் அடிப்படை ஆதாரமாகவுள்ளது மொழிதான்.

எங்களுடைய சமூகத்தின் பண்பாட்டில் பிறழ்வுகள் ஏற்படும் பொழுதும் அவைக்கான நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றபோதும் அவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கும் அவற்றைத் திருத்தி அமைத்து உள்ளத்திலே இருக்கின்ற உணர்வுகளை தட்டியெழுப்புவதற்கும் ஊடகமாக இருப்பது இந்த மொழி ஒன்று தான்.

அந்த மொழியின் ஊடாக எங்களுடைய சகல அம்சங்களையும் வெளிப்படுத்தி விடமுடியும் என்பதை யாழ்ப்பாண வாழ்வியல் என்கின்ற இந் நூல் விளக்குகின்றது.

இனங்களுக்கிடையில் கலாசாரம் பண்பாடு என்பன உளவுணர்வு ரீதியாக ஏற்படுத்தப்பட வேண்டுமே தவிர எந்தஒரு செயற்பாடும் அந்த உணர்வை வலிந்து ஏற்படுத்தக்கூடியதாக இருக்கக் கூடாது.

அப்படி ஏற்படுத்த முற்படும் போது தான் அது கலாசார பிறழ்வுகளுக்கும் இன சமூக முரண்பாடுகளுக்கும் வழி வகுக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| தக்காளி | 120 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 |
| கோவா | 100 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 120 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 60 |
| புடோல் | 40 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 20 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 100-150 | 120-160 | 120 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 70 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | -- |
| பயற்றங்காய் | 100 | 60 | 60 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 60 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | 600 |
| போஞ்சி | 100 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 30 | 40 |
| தேசிக்காய் | 140 | 60 | 80 | 80 |
| தேங்காய் ஒன்று | 60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 100 |

# இராசி பலன்

06.05.2013
(சித்திரை 23, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துவாதசி பின்னிரவு 4.18 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 4.35 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை

**மேடம்** தொழில் நன்மை கருதி வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ் நிலை உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், செய் தொழில் மேன்மையுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கடகம்** பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, எதிர்பாராத பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், ஒரு சில நாட்களாக தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**சிங்கம்** குடும்பத்தில் கோபமாக பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உங்கள் செயற்பாடுகளில் பிறர் குறைகண்டு கூறலாம், போஜன சுகமுண்டு, செலவுகள் அதிகமாகும்.

**கன்னி** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், கௌரவமான நாள், செய்தொழிலில் அதிக பிரையாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்** பகைவர்கள் விலகுவார்கள், உடல் நலம் சீராகும், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான நாள், வரவேண்டிய பாக்கிகளை வசூலிக்கும் முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, சில காரிய இடையூறுகள் ஏற்படலாம், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம்மேலோங்கும், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சங்கள் குறையும்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், கல்வியில் ஆர்வம் காட்ட முற்படுவீர்கள், மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும்.

**மகரம்** விடாமுயற்சிக்கு பரிசு கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் கிடைக்கும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டி வரலாம்.

**மீனம்** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், சயனசுகமுண்டு ஆழ்ந்த சிந்தனையுண்டு, புதிய பொருட்சேர்க்கைக்கு வித்திடுவீர்கள், போசன சுகமுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயலொக் eZ Cash உடன் ஜனசக்தி ஒன்றிணைகிறது

ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனமானது டயலொக் அக்ஸியாட்டா பி.எல்.சி. நிறுவனத்துடன் கடந்த வாரம் நுட்ப ரீதியிலாக கைகோர்த்ததன் மூலம், இலங்கையின் eZ Cash சேவையின் நாடளாவிய வலைப்பின்னலில் புதிய உறுப்பினராக ஒன்றிணைந்துள்ளது. நாடு முழுவதும் பரந்துபட்டதாக அமைந்துள்ள 12,000 இற்கும் மேற்பட்ட டயலொக் eZ Cash வணிக நிலையங்களில் ஏதாவது ஒன்றினூடாக ஜனசக்தி நிறுவனத்தின் பல்லாயிரக்கணக்கான ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வாடிக்கையாளர்கள் தத்தமது காப்புறுதித் தவணைக் கட்டண கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு இந்தப் பங்காளித்துவம் தற்போது வசதியளித்துள்ளது.

ஜனசக்தி ஆயுள் மற்றும் காப்புறுதிகளுக்கான தவணைக் கட்டணங்களை செலுத்தும் முறைமையில் ஏற்கெனவே காணப்படுகின்ற மிகச் சிறந்த தெரிவுகளுக்கு மற்றுமொரு புதிய இணைப்பாக இந்த ஒன்றிணைவு அமைகின்றது.

டயலொக் eZ Cash வணிக மையங்கள் நாடு முழுவதும் பரந்துபட்டதாக அமைந்துள்ளதால், தூர கிராமங்களில் உள்ள எமது வாடிக்கையாளர்கள் ஒரு வங்கிக்கோ அல்லது ஒரு ஜனசக்தி கிளைக்கோ வருகைதரவேண்டிய அவசியமில்லை.

எனவே, இப்புதிய வசதிகுறிப்பாக அவ்வாறான கிராமங்களிலுள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைகின்றது. மேலும், எமது காப்புறுதி வாடிக்கையாளர்கள் விற்பனை அதிகாரிகளில் தங்கியிருக்காது நேரடியாகவேதமது தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான வசதியையும் அளிக்கின்றது என்று ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான பிரகாஷ் ஷாஃப்ட்டர் தெரிவித்தார்.




டயலொக் அக்ஸியாட்டா குழும பிரதம நிறைவேற்று அதிகாரியான கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய, இலங்கையில் முன்னணியில் திகழும் காப்புறுதியாளர்களுள் ஒன்றான ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தை டயலொக் eZ Cash சேவை வலையமைப்பில் இணைத்துக் கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ஜனசக்தி வாடிக்கையாளர்களுக்கு சௌகரியம், வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேர (24x7) சேவை, நாடளாவிய சேவைக் கிடைப்பனவு ஆகிய விடயங்களில் eZ Cash ஆனது குறிப்பிடத்தக்க மேலதிக பெறுமதியைச் சேர்க்கும் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அவர்கள் தமது காப்புறுதி புதுப்பித்தலுக்கான தவணைக் கட்டணங்களை ஒரு கையடக்கத் தொலைபேசியில் இருந்து செலுத்துவதற்கு வசதியளிக்கும் ஒரு தொழில்நுட்பமாக eZ Cash தொழிற்படும். அதன் ஊடாக, தமது காப்புறுதிக் கொள்கைகளை வாடிக்கையாளர்கள் உரிய காலத்தில் புதுப்பித்துக் கொள்வதற்கு இவ் வசதி இடமளிக்கின்றது என்று தெரிவித்தார்.

ஜனசக்தி நிறுவனமானது, 2000 இற்கும் அதிகமான கொடுப்பனவு மையங்களைக் கொண்ட ஒன்பது பங்காளித்துவ வங்கிகளுடனும் ஒன்றிணைந்துள்ளது. அவையாவன - சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி, NDB வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, மக்கள் வங்கி, யூனியன் வங்கி மற்றும் HSBC வங்கிகளாகும்.

அதுமட்டுமன்றி, வாடிக்கையாளர்கள் 100இற்கும் அதிகமான எந்தவொரு ஜனசக்தியின் கிளை அலுவலகத்திற்கும் சென்று கட்டணங்களை செலுத்துவதற்கும் அதேபோல் கடனட்டை அல்லது வங்கி நிலையியற் கட்டளைகள் மூலமாக அதனை மேற்கொள்வதற்கும் www.janashakthi.com என்ற இணையத்தளத்தில் (ஒன்லைன்) கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் முடியுமாகவுள்ளது.




# மத்திய வங்கியின் தகவல்கள் உண்மையானது?

மத்திய வங்கியினால் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார சுட்டிகளை கொண்டு வெளியிடப்பட்ட ஆண்டறிக்கைகள் எவையும் போலியானவை இல்லை என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்று ஐக்கிய தேசிய கட்சி நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் கருத்து வெளியிடும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த தகல்கள் உண்மைக்கு புறம்பானதுஎனக்கருதினால்அதனை ஆதாரத்துடன் நிரூபிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஏப்ரல் பணவீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளது

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறரன கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் (2006/07=100) அளவிடப்பட்டவாறான பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 7.5 சதவீதத்திலிருந்து 2013 ஏப்ரலில் 6.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆண்டு சராசரி அடிப்டையில் பணவீக்க வீதம் முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்டதைப் போன்று 2013 ஏப்ரலிலும் மாற்றமடையாமல் 8.8 சதவீதமாகக் காணப்பட்டது.

# ஆண்டின் முதல் காலாண்டில் சிகரெட் விற்பனை வீழ்ச்சி

ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் சிகரெட் விற்பனை முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிலோன் டுபாக்கோ கம்பனி பிஎல்சி அறிவித்துள்ளது.

ஆயினும் நிறுவனத்தின் இலாபம் 1.8 வீதத்தால் மட்டுமே வீழ்ச்சிகண்டுள்ளதாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சவால்கள் நிறைந்த பொருளாதார சூழ்நிலையின் காரணமாக இந்த விற்பனை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த காலாண்டில் மட்டும் நாட்டின் புகை பிடிப்பவர்களின் மூலம் 15.1 பில்லியன் ரூபா திறைசேரிக்கு வருமானமாக செலுத்தியிருந்ததாகவும் கம்பனி அறிவித்துள்ளது.

கம்பனி தனது வாடிக்கையாளர்களை உயர் ரக சிகரெட் வகைகளை பயன்படுத்த ஊக்குவித்துள்ளதாகவும் தனது ஏற்றுமதியை 31 வீதத்தால் அதிகரித்துக் கொள்ளவும் முடிந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

## முதற்பெண்மணியால் வங்கிக் கிளை திறப்பு!

முதற் பெண்மணியான ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, பான் ஏசியா வங்கியின் 74 ஆவது கிளையை தங்கல்ல அம்பிட்டி வீதியில் உள்ள கட்டிடம் ஒன்றில் கடந்த வாரம் திறந்து வைத்தார்.

பான் ஏசியா வங்கித் தலைவர் நிமல்பெரேராதலைமையிலானஉயர் அதிகாரிகள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

# பான் ஏசியா வங்கியின் சுவ சவி நிலையான வைப்பு புதிய பெறுமானம் சேர்க்கப்பட்ட அறிமுகத் திட்டம்

PAN ASIA BANK
*At Your Service*

1) சுவ சவி நிலையான வைப்பு பான் ஏசியா வங்கியின் புதிய பெறுமானம் சேர்க்கப்பட்ட அறிமுகத்திட்டமாகும். நிலையான வைப்புக்கான வட்டிக்கு மேலதிகமாக வைப்பாளருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவக் காப்புறுதியொன்றையும் வழங்குவது இத் திட்டத்தின் தனித் துவமாகும்.

2. சுவ சவி திட்டத்தின் கீழ் முதலீடு செய்பவர்களுக்குச் சுயமாகவே அவர்களது வைப்புக் தொகையின் வருடாந்தம் 15 சதவீதத்துக்கு சமனான ஒரு தொகை குடும்ப வைத்தியக் காப்புறுதியாகிறது. இந்த காப்புறுதியானது வைப்புத் தொகை அமுலில் இருக்கும் முழு காலப்பகுதிக்கும் செல்லுபடியாகும். உதாரணமாக 65 வயதுக்குக் குறைந்த வைப்பாளர் ஒருவர் 10 இலட்ச ரூபாயை 5 வருடங்களுக்கு நிலையான வைப்பில் இடுவாராயின் அவரது குடும்பம் அந்த 5 வருடங்களுக்கும் 150,000 ரூபாயை வைப்பு அமுலிலுள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் மருத்துவச் செலவாகப்பெற உரித்துண்டு.

3.இந்த மருத்துவக் காப்புறுதி குறிப்பிட்ட சில மருத்துவமனைகளுக்கு மட்டும் எல்லைப் பத்தப்பட்டதல்ல. எந்தவொரு தனியார் மருத்துவ மனையிலும் வைத்தியசிகிச்சையை மேற்கொள்ள முடியும். கொழும்பிலுள்ள குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைகளான நவலோக, டேர்டன்ஸ், ஆசிரி, ஹேமாஸ் மற்றும் சென்றல் ஆகியவற்றுக்காக நாம் வழங்கும் காசற்ற காப்புறுதி அட்டையைச் சமர்ப்பிப்பதன் மூலம் இந்தமருத்துவ மனைகளில் வைத்தியக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன்நாடெங்குமுள்ளஏனைய தனியார் மருத்துவமனைகளிலும் வைப்பாளர் இந்த மருத்துவக் காப்புறுதியைப் பயன்படுத்திக் கொள்ள முடிவதோடு மீளளிப்பையும் ஒரு சில நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

4. 65 வயதிற்கு மேற்பட்ட வைப்பாளர்களும் இந்த காப்புறுதிக்கு உரித்துடையவர்கள். 65 தொடக்கம் 75 வயது வரையுள்ளவர்களுக்கு அவர்களது வைப்புத் தொகையின் 10% மருத்துவக் காப்புறுதிக் காப்புறுதியாக வழங்கப்படும்.

5. சுவ சவி மருத்துவக் காப்புறுதி மூலம் வாடிக்கையாளரும் அவரது குடும்பத்தினரும் பயன் பெறலாம். குடும்பம் என்பது கணவன், மனைவியுடன் 21 வயதுக்குக் குறைவான, திருமணம் செய்யாத தொழில் புரியாத பிள்ளைகளையும் உள்ளடக்கும்.

6. வைப்பாளர் திருமணம் முடிக்காதவராயின் 65 வயதுக்குக் குறைவான அவரது பெற்றோர்களையும் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்க முடியும்.

7.இந்த மருத்துவமனைகளின் அறையொன்றுக்கு நாளாந்தம் 15,000 ரூபாவும் 20,000 ரூபாயுக்கு மேற்படாத தொகையொன்று கண் மருத்துவத்துக்கு கண் வில்லைக்கு (லென்ஸ்) வழங்கப்படும். மேற் கூறியவற்றுக்கு மேலதிகமாகப் பின்வரும் வரப்பிரசாதங்கள் வழங்கப்படும்.

◆ அனுமதிக் கட்டணங்கள் உள்ளடங்கலாகமருத்துவமனை, நேர்ஸிங் ஹோம் பாராமரிப்புச் செலவுகள்.

◆ மருத்துவ ஆலோசனை நிபுணர் ஒருவரின் பரிந்துரைக்கு ஏற்ப விசேட சிகிச்சைக்கான மருத்துவ, சத்திரசிச்சை செலவுகள்.

◆ சத்திரசிகிச்சைக்கூட செலவுகள்.

◆ பிசியோதெரப்பி சிகிச்சை.

◆ எக்ஸ்ரே, ரேடியா லொஜிக்கல், ரேடியம் பரிசோதனை நிபுணர்களின் சேவைகள் ,ஆழ்சிச்சை, மின்னியல் சிகிச்சை.

◆ சத்திரசிகிச்சை நிபுணரினதும் மயக்கம் வரவழைக்கும் வைத்தியரின் கட்டணங்கள் .

ஆலோசனை நிபுணர்களினதும் விசேட நிபுணர்களினதும் கட்டணங்கள் .

◆ சாதாரண பிரசவம்.

◆ [illegible] கர்ப்பத்தால் உருவாகும் சிக்கல்களும்.

8.சுவ சவித் திட்டத்துக்கான குறைந்தபட்ச வைப்பு 100,000/= ரூபாயாகும்.வைப்புக் காலம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்டது.

9.சுவ சவித் திட்டத்தின் ஏனைய அனுகூலங்கள் வைப்பாளர் மாதாந்த ரீதியிலோ, முதிர்வுக்கால ரீதியிலோ தனது வைப்புக்கான கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தைப் பெறுவதுடன் அவரது வைப்புக்கு உச்சபட்ச பாதுகாப்புக்கான உத்தரவாதமும் வழங்கப்படும்.

10. சுவ சவித் திட்டம் அறி முகத்துக்கான காரணம்,எந்தவொருநபரும் தனது அன்புக்குரியவர்களுக்கு மிகச் சிறந்த ஆரோக்கியத்தை வழங்க விரும்புவது இயல்பு.

எனினும் அதிகரித்துவரும் மருத்துவச் செலவுகளால் நோயுற்ற குடும்ப உறுப்பினர் ஒருவரை தனியார் மருத்துவமனையில் அனுமதிப்பதன் மூலம் அந்த குடும்பத்தின் எதிர்காலத்துக்கான சேமிப்புக்கு பாதகம் ஏற்படலாம். சுவ சவித் திட்டத்தின் மூலம் வைப்பாளர் ஒருவர் தனது வைப்புக்கு கவர்ச்சிகரமான வட்டியைப் பெற்று தனது சேமிப்பை அதிகரித்துக் கொள்ளும் அதேவேளை. தனது அன்புக்குரியவர்களின் மருத்துவநலனிற்கும் உயரிய பாதுகாப்பை வழங்க முடிகின்றது.

11.சுவ சவித் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் நாடெங்குமுள்ள எமது 74 கிளைகளில் ஏதாவதுதொன்றுக்கு விஜயம் செய்வதன் மூலமாகவோ 011-4667222 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,962.17 | 6,013.18 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,359.36 | 3,405.99⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,237.887 |

**அதிகரித்த பங்குகள்** அபான்ஸ் பினான்சியல்( 36.90), எஸ்எம்பி லீசிங்(0.50), லங்கா ஐஓசி(27.00), லங்கா செரமிக்(80.00), என்வெயர் றிசோர்ஸ்(3.00)

**வீழ்ச்சியடைந்த பங்குகள்** ரச்வூட்(6.00), ஜிஎஸ் பினான்ஸ்(620.00), நேசன் லங்கா(1.40), ஹோட்டல் சிகிரியா(76.80), செரண்டிப் ஹோட்டல்(17.70).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.73 | 127.78 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.24 | 198.88 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.25 | 167.67 |
| சுவிஸ் பிராங் | 132.53 | 137.64 |
| கனேடிய டொலர் | 122.65 | 127.09 |
| அவுஸ்திரேலிய டொலர் | 127.16 | 132.04 |
| சிங்கப்பூர் டொலர் | 100.45 | 103.93 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.31 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.35 | |
| ஐக்.அர.| இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.44 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 30 வாழைக்குலைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

50 ஆயிரம் ரூபா பெறுமதியான 30 இற்கும் மேற்பட்ட வாழைக்குலைகள் சில்லாலை தோட்ட வெளியில் திருடப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் சில்லாலைப் பகுதியில் வாழைத் தோட்டம் வைத்துள்ள மூவர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட நபர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# அரசாங்கம் அச்சப்படும் சக்தியாக புலம்பெயர் தமிழ் மக்கள் உள்ளனர்

## செல்வம் எம்.பி. புகழாரம்

(கொழும்பு)

நாட்டில் தமிழர்கள் அடக்குமுறைக்கு உள்ளாகியிருப்பதோடு பல அழுத்தங்களை சந்தித்து வரும் நிலையில் தாயகத் தமிழர்களின் குரலாக புலம்பெயர் மக்களால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் உற்சாகமளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னெடுப்பில் புலம்பெயர் தமிழர்கள் மட்டுமல்ல உலகத் தமிழர்கள் அனைவரினதும் பங்கெடுப்புடன் உருவாகிவரும் தமிழீழ சுதந்திர சாசனம் குறித்து கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலையை நோக்கிய செயற்பாட்டைபுலம்பெயர்உறவுகள் மிகத் திறமையாக முழுமூச்சாக செய்து கொண்டிருக்கின்றார்கள் எனத் தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன் அரசாங்கம் அச்சப்படுகின்ற ஓர் சக்தியாக புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவேந்தும் தமிழீழ தேசிய துக்க நாளான மே 18 ஆம் நாளன்று தமிழீழ சுதந்திர சாசனம் முரசறையப்பட இருக்கின்ற நிலையில் இக்கருத்து வெளிவந்துள்ளது.

சுய நிர்ணய கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற வகையிலான அரசியல் அபிலாசையை வென்றடைவதற்கான வழிமுறையாக புலம்பெயர் வாழ் தமிழர் சக்தியே அழுத்தங்களை சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ள முடியும் என தெரிவித்துள்ள செல்வம் அடைக்கலநாதன், தமிழகம்- மலேசியா உலகத் தமிழர்களின் சக்திகள் ஒன்றிணையும் போது விடுதலையை வென்றெடுக்க முடியும் என நம்பிக்கை உள்ளதென தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சுய நிர்ணய கோட்பாட்டு அடிப்படையில் உரிமையை நிலைநாட்டுவதற்கான புலம்பெயர் தமிழ் மக்களின் முயற்சிக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இம்முன்னெடுப்புகள் வெற்றி பெற தனது வாழ்த்துக்களையும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தீவில் தமிழீழம் என்ற சொல்லை வெளிப்படையாக சொல்லவோ அல்லது எழுதவோ முடியாத சிங்கள பேரினவாத அரசின் இறுக்கமான நிலைக்குள் நின்று கொண்டு தமிழீழ சுதந்திர சாசனம் குறித்து இக்கருத்து வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்

(கொழும்பு)

மாற்று வலுவுள்ளோருக்கான முச்சக்கரவண்டி, சைக்கிள் திருத்தத் தெரிந்தவர்களை கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேசசெயலர் க.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கான பதிவுகளை அலுவலக நேரங்களில் மேற்கொள்ளுமாறும் இந்தப் பதிவுகள் தொடர்ச்சியாக நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-60)


## கூறுவிலை கோரல்

திருமுறிகண்டியில் அமைந்துள்ள வட பிராந்திய பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

01. எரிபொருள் நிரப்பு நிலையத் திற்கான உள்வீதி 100m
02. இருக்கும் பாலத்தினை அகலப் படுத்துவது
03. எரிபொருள் பம்பிகளுக்கு கூரை வேலை செய்வது

கூறு விலைக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் வேலைத் தளத்தினை பார்வையிட்டு மேலதிக விபரங்களுக்கு கனகாம்பிகை குளத்தில் அமைந்துள்ள தலைமை செயலகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு கூறுவிலை விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்வதுடன் 15.05.2013 ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலை விண்ணப்பத்தினை தலைமை செயலகத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**திரு. க. சிவசுப்பிரமணியம்,**
**தலைவர்,**
**வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்,**
**கிளிநொச்சி.**
(சி/3225)

### பெறுகைகளுக்கான அழைப்பு
### விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு, வடமாகாணம்.

வடமாகாண காணி நிர்வாகத்திணைக்களத்தின் தென்னம் நாற்றுமேடைக்கு தேவையான நல்லின விதைத்தேங்காய்களினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| தாய்த்தாவரத்தின் தன்மை | தேவையான அளவு | தேங்காய் ஒன்றின் விலை | வழங்கக்கூடிய விதைத்தேங்காய்களின் அளவு |
|---|---|---|---|
| 25-30 ஆண்டிற்குட்பட்ட நோயற்ற நல்லின தென்னை | 100,000 | | |

நாட்டமுள்ள வழங்குநர்கள் மேற்குறிப்பிட்ட விபரங்களை உள்ளடக்கி சுயமாகத் தயாரிக்கப்பட்ட கூறுவிலைப்படிவங்களினை முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் **விதைத்தேங்காய் வழங்குவதற்கான கூறுவிலை** எனக் குறிப்பிட்டு 20.05.2013ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ கீழ்க்காட்டப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களினை வட மாகாணக் காணி நிர்வாகத் **திணைக்களம், இல. 295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல. 021 321 5539). முத்திரையிடப்படாத தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கூறுவிலைகள் யாவும் 20.05.2013 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். கூறுவிலைகள் திறக்கப்படும் போது கூறுவிலைதாரர் அல்லது அவரின் பிரதிநிதி அனுமதிக்கப்படுவர்.

கிடைக்கப்பெற்ற கூறுவிலையினை நிராகரிப்பதற்கு ஒரு பகுதியை மட்டும் ஏற்பதற்கு அல்லது ஒரு பகுதியினை மட்டும் நிராகரிப்பதற்கு பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

**யு.எல்.எம்.ஹால்தீன்**
**தலைவர்,**
**மாகாண அமைச்சு பெறுகைக்குழு,**
**விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன,**
**கடற்றொழில் அமைச்சு,**
**வடமாகாணம்.**
**இல. 04, புருடி லேன்,**
**கண்டி வீதி, அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**
(சி/3197)

### கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து (V)
நட்சத்திரம்:ரோகினி 1
கி.பா: 50, 7இல் செவ்.
தகைமை/தொழில்: Parister (PHD),Following UK (PR)
தொ.இ: B -1763

பிறப்பு: 1989 இந்து (K)
நட்சத்திரம்:ஆயிலியம் 1
உயரம்:5'4"
கி.பா: 18.75, சூரி, செவ்.
தகைமை/தொழில்: ஆசிரியர் தனியார்
தொ.இ: G -1756

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: பூரட்டாதி 1
உயரம்: 5'4"
கி.பா: 52, 8இல் செவ்
தகைமை/ தொழில்: திறந்த பல்கலை பொறியியல் இலத்தரனியலாளர் அவுஸ்திரேலிய PR
தொ.இ: B -1769

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்:உத்தராடம் 3
உயரம் : 5'3"
கி.பா: 37.25, 4 இல் செவ்
தகைமை/ தொழில்: A/L English Diploma, Software Engineer
தொ.இ: G-1782

பிறப்பு: 1986 இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம் 4
உயரம்: 6'
கி.பா: 31, 4 இல் செவ்
தகைமை/ தொழில்: MBBS Dr
தொ.இ: B -1774

பிறப்பு: 1986 இந்து (V)
நட்சத்திரம்: அத்தம் 4
உயரம்: 5'2"
கி.பா: 32, 7இல் செவ்.
தகைமை/ தொழில்: BSc, Civil Engineering
தொ.இ: G -1783

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 32, 8இல் சூரி,செவ்
உயரம்: 6'
தகைமை/தொழில்: BSc,MSc IT, France PR
தொ.இ: B -1776

பிறப்பு: 1991 இந்து (V)
நட்சத்திரம்:கார்த்திகை 2
உயரம்: 5'5"
கி.பா: 16
தகைமை/ தொழில்: Studying Nursing, Norway PR
தொ.இ: G -1784

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வீக நிலங்களை அபகரிப்பது அடிப்படை மனிதவுரிமை மீறல்

## யாழ்.ம.கோ. பொதுநிலையினர் கழகம்

(யாழ்ப்பாணம்)

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விட நிலங்களை அபகரிப்பது அடிப்படை மனிதவுரிமை மீறலாகும்.

இதனை. நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என யாழ். மறைக் கோட்ட பொது நிலையினர் கழகம் கண்டனம் வெளியிட்டுள்ளது. அக் கழகத்தின் கண்டன அறிக்கையில்,

வலிகாமம் வடக்கு மக்களின் வாழ்விடங்களையும் அவர்களுடைய விவசாய நிலங்களையும் அபகரிப்பது, தமது சொந்த இடங்களில் மீள குடியேறி வசிக்க முடியும் என்ற அம் மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை தகர்ப்பதாகவே அமைந்துள்ளது.

இங்கு மட்டுமல்ல வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவது தேசிய நல்லிணக்கத்திற்கு குந்தகமாக அமையும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றோம்.

போரினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு தமது வாழ்விடங்களை இழந்து துன்புறும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்விடங்களையும் நிலங்களையும் வழங்கி மீள் குடியேற்றுவதே அரசின் தலையாய கடமை என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

இச் செயற்பாடுகளுக்கு எதிராக மக்களால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எமது பூரண ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




நன்றி: ஐலண்ட்

## மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி மாதாயி லிங்கேஸ்வரர் ஆலய மணவாளக் கோல விழா எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 8 மணிக்கு லிங்கேஸ்வரப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. (அ-5)




# தெங்கு உற்பத்தியை அதிகரிக்க மானிய அடிப்படையில் உரம்

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் தெங்கு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தெங்கு உற்பத்தியாளர்களுக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெங்குத் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஏ.பி.ஜெகத் புஸ்ப குமார தெரிவித்துள்ளார்.**

யாழ்.சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வரணிப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கப்புறுக்க புறவர திட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பெருந்தோட்டப் பயிராக விளங்கும் தெங்குப் பயிர்ச் செய்கையை மேம்படுத்த வேண்டும் என்ற ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய நாட்டில் விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய தெங்கு உற்பத்தியாளர்களுக்கு மானிய அடிப்படையில் உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 4 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உரத்தை ஆயிரத்து 200 ரூபாவிற்கு வழங்கவுள்ளதுடன் 3 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் 15 இலட்சம் தென்னங்கன்றுகள் நடுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு 3 இலட்சத்து 310 தென்னங்கன்றுகளும் கடந்த 2012 ஆம் ஆண்டு 12 இலட்சத்து 50 ஆயிரம் கன்றுகளும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இங்குள்ள மக்களும் கிடைத்திருக்கும் சுதந்திரத்தை பயன்படுத்தி எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும்.

ஒரு கொடி நன்றாக படர வேண்டும் என்றால் ஒரு மரத்தின் உதவி கட்டாயம் தேவை. அந்தக் கொடியைப் போல நாங்களும் செயற்பட்டு எமது பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றார்.

யுத்தத்திற்குப் பின்னர் வட பகுதியில் தெங்கு உற்பத்திக்கு ஜனாதிபதி முக்கியத்துவம் கொடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு பூராகவும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கப்புறுக்க புறவர சங்கங்கள் அமைக்கப்பட்டு தெங்கு உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒரு தனிப்பட்ட நபருக்கு 5 ஏக்கர் வரை நடுகை செய்ய தென்னங்கன்றுகள் வழங்க நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## பரு.நகராட்சி மன்றத்தினால் வீதிகள் புனரமைக்கப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் சபை நிதியில் இருந்து 3 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

குறிப்பாக 15 இலட்சம் ரூபா செலவில் இவ் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை தவிசாளர் சபா.ரவீந்திரன் மேற்கொண்டு வருகின்றார்.

இதில் 3, 4 ஆம் குறுக்குத்தெரு இணைப்பு வீதி, பண்டாரி அம்மன் பின் வீதி, ஒரு தாளை உடையார் இணைப்பு வீதி ஆகிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்து வந்த இவ்வீதிகளை மக்களின் நலன் கருதி நகராட்சி மன்றம் விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-10)

# கஞ்சா கடத்தியவர்களுக்கு இரு வார கால விளக்கமறியல்

இந்தியாவில் இருந்து பெருந்தொகையான கஞ்சாவை கடத்தி வந்த அறுவரையும் இரண்டு வாரத்திற்கு விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த நால்வரும் வேலணையைச் சேர்ந்த இருவருமாக ஆறு பேரை கைது செய்த நெடுந்தீவு பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இவர்கள் அனைவரையும் இரண்டு வார காலத்திற்கு விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவர்களிடம் இருந்து 101 கிலோ 850 கிராம் கஞ்சா பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு

(நவாலி)

நவாலி பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பகுதியில் கட்டாக்காலி கால்நடைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இக்கால்நடைகள் அவ்வீதிகளை நாசம் செய்வதால் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

அப்பகுதியில் வாகனங்களில் பயணிக்கும்போது கால்நடைகள் திடீரென குறுக்கே பாய்வதால் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

அத்துடன் சில கட்டாக்காலி நாய்களும் உலாவுவதால் நாய்க் கடிக்கும் ஆளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இத்துறை சார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதே அப்பகுதி மக்களின் வேண்டுகோளாகும். (அ-3)

# விஷமிகளால் கழிவொயில் வீச்சு; பாதிக்கப்பட்டவர் முறையீடு

(கரணவாய்)

கரவெட்டி நெல்லியடி விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற வங்கி ஊழியரின் வீட்டிற்கு விஷமிகளினால் கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கரவெட்டி நெல்லியடி விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற வங்கி ஊழியர் ஒருவர் தனது வீட்டிற்கு முன் மின்சார விளக்குகள் பொருத்தப்படாத காரணத்தால் இரவு வேளைகளில் செல்வோர் விபத்துக்கு உள்ளாகுவதனால் இவற்றைத் தடுக்கும் நோக்கில் மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு இவர் தனது வீட்டிற்கு முன்னால் மின் விளக்குகளை பொருத்தியுள்ளார்.

மின் விளக்குகள் பொருத்தப்பட்டமையால் இதில் இருந்து சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவர்களுக்கு மின்விளக்குகள் இடையூறாக இருந்ததன் காரணத்தினால் தமது வீட்டிற்கு கழிவொயில் வீசப்பட்டுள்ளது என வீட்டு உரிமையாளர் சந்தேகம் தெரிவிக்கின்றார்.

வீட்டின் மதில், கேற், சுவர் தூண் என்பவற்றுக்கே இக் கழிவொயில் வீசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்து.

மேலும் இவரது வீட்டுக்குள் தொடர்ச்சியாக மலம் மற்றும் கற்கள் வீசப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

மேற்குறித்த சம்பவம் தொடர்பாக கரவெட்டி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-60)

## சிறுமி மீது வன்புணர்வு; வயோதிபர் கைது

(யாழ்ப்பாணம்)

ஐந்துவயதுச்சிறுமியைவயோதிபர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இப்பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியை விநாயகர் வீதி, கொக்குவிலைச் சேர்ந்த 59 வயதுடைய வயோதிபர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளார்.

இதனால் அச்சமடைந்த சிறுமி அதுபற்றி தனது பெற்றோர்களிடம் கூறியதையடுத்து பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய வயோதிபரை யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர்.

குறித்த நபரை நீதவான் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்துள்ளார். (அ-2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்கு தவிசாளர் மீது விரைந்து நடவடிக்கை எடுங்கள்

## அல்லது பதவி விலகுவோம் என உறுப்பினர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் தவிசாளர் மீது கட்சியின் உயர்பீடம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் பதவி விலகப் போவதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் 8 பேர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். சபையின் அங்கீகாரம் இல்லாமல் எதேச்சதிகாரமாக செயற்பட்டு பல ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்டு இருப்பதாக தவிசாளர் அ.ஜெபநேசன் மீது குற்றஞ்சாட்டிய வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இது தொடர்பில் கட்சியின் உயர் பீடத்திற்கு அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டியிருந்தனர்.**

யாழ்.ஊடக அமையத்தில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மேற்படி குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உறுப்பினர் ஆர்.மகேந்திரன் தெரிவிக்கையில்,

எமது சபை உருவாக்கப்பட்டு ஒன்றரை வருடங்களைக் கடந்துள்ள போதும் இது வரை எந்தவிதமான உருப்படியான வேலைகளும் செய்யப்படவில்லை.

வாக்குகளைப் பெறுவதற்காக எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் மக்களிடம் செல்ல முடியாத நிலையை தவிசாளர் ஜெபநேசன் ஏற்படுத்திவிட்டார்.

இதனால் விரக்தி அடைந்த நிலையில் எனது உறுப்பினர் பதவியினை இராஜினாமா செய்வது என்ற முடிவிற்கே நான் வந்துவிட்டேன்.

தவிசாளர் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்தி எமது கட்சியின் உயர் பீடத்திற்கு கடந்த 3 ஆம் மாதம் 10 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதோடு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளேன்.

இருப்பினும் அதற்கு கட்சியின் உயர் பீடம் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் எனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளேன் என்றார்.

இதன்போது ஆளும் கட்சியின் மற்றொரு உறுப்பினரான எஸ்.கௌரிகாந்தன் எமது கட்சியின் உறுப்பினர் மகேந்திரன் பதவி விலகினால் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உபதவிசாளர் எஸ்.சிவகுமாரன் உள்ளிட்ட 8 பேர் பதவி விலகத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

இதற்கு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்துப் பேசியிருந்தனர்.

மேலும் வலி.தென்மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாதகல் காடாப்புலம் காணியை இராணுவத்தினர் அபகரிப்பதற்கு தவிசாளர்தான் காரணம் எனவும், குறித்த காணி தொடர்பான விடயங்களை சபையில் சமர்ப்பிக்காமல் மறைத்து வைத்து விட்டார் எனவும் குற்றஞ்சாட்டினார்.




அத்தோடு சபையின் அனுமதி பெறப்படாது வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தவிசாளர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் அவர் மீது எங்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளதோடு இலஞ்சம் பெற்றுக் கொண்டாரா என்பது தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டி வருவதாகவும் தவிசாளர் மீது சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். (அ-6)

# வடக்கு மாகாணசபைத் தேர்தல் செப்டெம்பரில் நடைபெறுமா?

வடமாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிடுவார் என்று ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவை கோடிட்டு இந்த செய்தி வெளியாகியுள்ளது.

ஏற்கனவே வாழ்வின் எழுச்சி என்ற திவிநெகும என்ற சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது வடக்கு மாகாண சபையின் அனுமதி அதற்கு கோரப்பட்டது.

எனினும் அப்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மாகாண சபையின் அமைப்பு இன்னும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் செப்டெம்பர் முதல் வாரத்தில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி வட மாகாண சபையை அரசியல் அமைப்புக்குள் கொண்டு வருவது என்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக ஆங்கில பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

எனினும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் வடக்கு மாகாண சபைத் ேர்தல் நடத்தப்படக் கூடாது என்று கோரிக்கைகளை விடுத்து வருகின்றன.

இதேவேளை, வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட 21 ஆயிரம் சிங்கள மக்களை மீளக் குடியேற்றாது வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என தேசத்தை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இதை உரிமை மீறல் என சாடியுள்ள அவர், 1977 ஆம் ஆண்டு சிங்கள மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வடக்கு தேர்தல் நடத்தப்பட்டால் வழக்கு தொடரப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறித்த பின்னரே வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசியலமைப்பின் 13 ஆம் சரத்தில் திருத்தங்கள் செய்வதன் மூலம் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர திட்டம் தீட்டப்படுவதாக தெரிய வருகின்றது.

மேலும் இந்த திருத்தங்களை 19 ஆவது அரசியல் திருத்தமாக கொண்டுவரவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (அ-2)

## தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்படவில்லை

### அரசாங்கம் தெரிவிப்பு


ஊடகவியலாளர்களின் கையடக்க தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கும் எவ்வித நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சரித்த ஹேரத் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை அவ்வாறான பதிவுகளை மேற்கொள்ளும் கருவிகளைக் கொண்டிருப்பதாக தான் அறிந்திருக்கவில்லை என்றும் இலங்கையின் சட்டப்படி அவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுமதியில்லை என்றும் சரித்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்யும் கருவிகள் கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாக சண்டே லீடர் அரசாங்க தரப்புக்களை கோடிட்டு மீண்டும் தெரிவித்துள்ளது. (அ-2)





**சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியில் வீரர்கள் பங்குபற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரமனும் புளியமரமும்



நீலாம்பூர் கிராமத்தில் வசித்து வரும் பரமனுக்கு நிறையப் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. சோம்பேறியான அவன் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்க விரும்பவில்லை. குறுக்கு வழியில் எப்படிப் பணம் சம்பாதிக்கலாம் என யோசித்துக்கொண்டிருந்த போது அவன் மன்னவி சந்தைக்கு சென்று பொருட்களை வாங்கி வரும்படி கூறினாள்.

சந்தை நடக்கும் ஊர் திருநகரம். திருநகரத்திற்கும் நீலாம்பூருக்கும் இடையே பூவாறு ஓடிக்கொண்டிருந்தது. இந்த ஆற்றைக் கடந்துதான் திருநகரத்திற்கே செல்லவேண்டும்.

பூவாற்றில் இறங்கி சந்தைக்கு நடந்து செல்வதுதான் குறுக்கு வழி. சமீபத்தில்தான் இரண்டு ஊர்களுக்கும் இடையே பாலம் போடப்பட்டிருக்கிறது. பாலத்தின் மீது திருநகருக்குச் செல்வது சுற்றுவழி. பலர் ஆற்றில் இறங்கி நடந்து செல்வார்கள். சிலர் பாலத்தின் மீது நடந்து செல்வார்கள். சந்தைக்குச் செல்ல பணமும் பையும் எடுத்துக்கொண்டு பரமன் பூவாற்றங்கரைக்கு வந்தான். சுற்றும் முற்றும் பார்வையைச் சுழற விட்டான் பரமன். வெகுதொலைவில் இருந்த ஒரு புளியமரத்தின் மீது அவன் பார்வை பட்டது. தீக்குச்சி போன்று பளிச்சென்று ஒரு

## அம்புலிமாமா கதைகள்

யோசனை மின்னியது. ஆஹா! இந்தப் புளிய மரத்தை வெட்டி விற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும். இரவு எட்டு மணிக்கு மேல் யாரும் ஆற்றில் வந்து செல்வதில்லை. எனவே எனது நம்பிக்கைக்கு பாத்திரமான இரண்டு, மூன்று ஆட்களுடன் தேவையான கருவிகளுடன் வந்து இரவோடிரவாக மரத்தை வெட்டி திருநகரில் இரகசியமாக வியாபாரம் செய்யும் மரக்கடையில் விற்றால் ஆயிரக்கணக்கில் பணம் கிடைக்கும் என்று தனக்குள் கூறிக்கொண்டான். அப்போதே பணம் கிடைத்து விட்டது போன்று மகிழ்ச்சியோடு ஆற்றில் இறங்கி திருநகரை நோக்கி நடந்தான்.

ஒருமாதத்தில் பரமன் மரத்தை வெட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டான். அவனது கூட்டாளிகளான சொக்கன், மூக்கன் உடன் நான்கைந்து முறை மரத்தை பார்த்துவிட்டுச் சென்றான். வெட்டுவதற்குத் தேவையான கருவிகளைத் தயார் செய்து விட்டான். மரம் வெட்டுவதற்கான நாளையும் குறித்து விட்டான். அமாவாசை கழிந்து நான்காம் நாள் இரவு 10 மணிக்கு மேல் வெட்ட ஆரம்பித்து விடியற்காலைக்குள் வெட்டி முடித்துவிடவேண்டும். வெட்டிப்போட்ட மரத்துண்டுகளை எடுத்துச் செல்ல வண்டிக்கும் ஏற்பாடு செய்துவிட்டான்.

அமாவாசை கழிந்த மூன்றாம் நாள் இரவு வளர்பிறை நிலவு மங்கலான ஒளி வீசிக்கொண்டிருந்தது. பரமன் பொருட்களை வாங்கிக்கொண்டு திருநகரிலிருந்து நீலாம்பூர் கிராமத்திற்கு பூவாற்றில் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய நண்பன் சொக்கன் அங்கு அவனைச் சந்திப்பதற்காக ஏற்கனவே திட்டம் தீட்டியிருந்தான். பாதிதூரம் ஆற்றைக்கடந்து விட்டான். இன்னும் சிறிது நேரம்தான்.

அப்போது மழைத்துளி பட்டால் எழும் மண்வாசனை மெதுவாக நாசியைத் தழுவியது. இங்கொன்றும் அங்கொன்றுமாக விண்ணில் தெரிந்த விண்மீன்கள் மேகத்தினால் மறைக்கப்பட்டன.பிறைநிலா மேகத்திற்குள் ஒளிந்து கொண்டுவிட்டது. மழைத்துளிகள் வேகமாக விழ ஆரம்பித்தன. அவர்கள் காதில் ஏதோ ஒலி கேட்டது. ஆறு ஓடிவரும் திசையைப்பார்த்து திடுக்கிட்டான்.

சீறிக்கொண்டு வரும் பாம்புபோல திடீரென்று காட்டாற்று வெள்ளம் வேகவேகமாக அவர்களை நோக்கி அசுர வேகத்தில் வந்துகொண்டிருந்தது. எப்பொழுதாவது பூவாற்றில் திடீரென்று வெள்ளம் வந்து கரை புரண்டோடும். அன்று வெள்ளம் வந்து விட்டது.


வேகமாக கரையை நோக்கி ஓடினான் பரமன். ஆனால் அவனால் ஓட முடியவில்லை. மனம் ஓடும் வேகத்திற்கு அவன் கால்கள் ஒத்துழைப்புக் கொடுக்கமறுத்தன. பிடிவாதக் குழந்தையை தந்தை தரதரவென்று இழுத்துச் செல்வது போல் வெள்ளம் அவனைத் தன்னோடு அழுத்தது. குப்புறத் தள்ளியது. மூழ்கி மூழ்கி எழுந்தான். ஆற்றோடு எங்கு இழுத்துச் செல்லப் படுகிறோம் என்றே அவனுக்குப் புரியவில்லை. திடீரென்று அவன் கை எதன் மீதோ மோதுவது போன்று உணர்ந்தான். உடனே தன் பலம் அனைத்தையும் திரட்டி கைக்கு தட்டுப்பட்டதை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான். தான் பிடித்துக் கொண்டிருப்பது மரத்தின் கிளை என்று புரிந்தது. தட்டுத்தடுமாறி கஷ்டப்பட்டு மரத்தின் நடுப்பகுதிக்கு முன்னேறினான். நல்லகாலம் மரத்தின் பாதி உயரத்திற்குதான் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது.

மரத்தின் அகலமான கிளையைப் பற்றிக்கொண்டு பரமன் உட்கார்ந்தான். வெள்ளம் அவன் காலைத் தொட்டுக் கொண்டே ஓடியது. ஒரே இருட்டு. மின்னல் வெளிச்சத்தில் ஆற்றின் இருபுறமும் வெள்ளம் ஓடிக்கொண்டு இருப்பது தெரிந்தது. மழையின் வேகம் தணிந்து தூறிக்கொண்டிருந்தது.

திடீரென்று தன் காலில் ஏதோ மோதுவது போன்றுஉணர்ந்தான்



பரமன். திடீரென்று வீசிய மின்னல் ஒளியில் ஒரு சிறுவன் உயிருக்குப் போராடிய படி தன் கால்களைப் பிடித்துக்கொண்டிருப்பது தெரிய வந்தது. ஒரு கையால் மரத்தைப்



பிடித்துக்கொண்டு இலேசாகக் குனிந்து மறுகையால் அந்தச் சிறுவனின் கையைப்பிடித்து மேலேயிழுத்து தன்னுடைய அருகில் உட்காரவைத்தான்.

அந்தப் பயங்கர இரவில், குளிரில் நடுங்கியபடி ஈர உடைகளோடு பரமன் இருந்தாலும் வெள்ளத்தில் உயிருக்குப் போராடிய படி ஆடுகள், சேவல்கள், பூனை, நாய் ஆகியவைகளையும் காப்பாற்றி மரத்தின் மேல் இடத்தில் பாதுகாப்பாக இருக்கச் செய்தான்.

மறுநாள் காலை சூரியன் உதிப்பதற்கு முன்பே நீலாம்பூர் மக்கள் விழித்துக்கொண்டு ஆற்றங்கரைக்கு ஓடிவந்தனர். மழை முற்றிலும் நின்று விட்டது. கரையைத்தாண்டி வந்து கொண்டிருந்த வெள்ளம் சற்றுத் தணிந்து பூவாற்றின் இரு கரைகளுக்கும் மத்தியில் ஓடிக் கொண்டிருந்தது.

சற்றுத் தொலைவில் மரத்தின் மீது இருந்த பரமன் ஒரு சிறுவன் மற்றும் உயிரினங்களை அந்தக் கிராமத்தின் நான்கு பேர் சேறு சகதிகளைக் கடந்து அவர்களைக் கீழே இறக்கி பாதுகாப்பான இடத்தில் கொண்டு சேர்த்தனர். பரமனுக்கு சூடான தேநீர் வழங்கினர்.

சூடான தேநீர் உள்ளே சென்றதும் பரமனுக்கு உயிர் வந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. இரவு பூராக தனக்கு புகலிடம் அளித்த அந்தப் பெரிய மரத்தையா வெட்டத் திட்டம் போட்டிருந்தேன். அந்தப்புளியமரம் அவனைப் பார்த்து இலேசாக தலையை அசைத்தது போன்று தோன்றியது.

புளியமரமே இரவு நேரத்திலே நான் எந்த இடத்தில் எந்த மரத்தின் மீது இருந்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. உன்னை அழிக்க நினைத்தேன். ஆனால் நீ என்னைக் காப்பாற்றி விட்டாய்.

நீ மரமாக இருந்தா லும் மற்றவர்களுக்கு உதவி செய்து கொண்டு தான் இருக்கிறாய். நல்லவர் களுடன் சேர்ந்தால் நல்ல எண்ணம் வரும் என்று ஆன்றோர்கள் சொன்னார்கள்.

இரவு பூராக உன் மடியில் நான் இருந்ததால் சில உயிர்களையும் காப்பாற்றியுள்ளேன். ஒரு உயிரை அழிப்பதைவிட ஒரு உயிரைக் காப்பாற்றுவது எவ்வளவு நல்ல செயல் என்று நன்கு உணர்ந்துகொண்டேன். இப்பொழுது என் மனம் நிறைந்திருக்கிறது. உதவி செய்து என்னைத் திருத்தி விட்டாய். நான் உனக்குச் செய்ய நினைத்த பாவத்திற்குப் பரிகாரமாக என் சோம்பேறித்தனத்தை விட்டு விட்டு என் கிராமத்தின் ஆற்றுப் படுக்கையிலேயே பசுமையான மரங்கள் நிறைய வளர்ப்பேன்என்று மனதுக்குள் கூறிக்கொண்டான் பரமன்.

இதற்குள் பரமனின் மனைவி அழுது கொண்டு அங்குவர தன்னைக் காப்பாற்றிய மரத்தை இரு கைகளால் கும்பிட்டுவிட்டு அவளோடு தன் வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்னன் சங்கிலியன்

36



"பூதவராயர் கோவிலை எவ்வாறு அமைக்கிறீர்கள்."

"கிழக்கு நோக்கிய கோவில். அதன் கர்ப்பக்கிரகம் இரண்டே முக்கால் நீளமும், இரண்டு முழ அகலமும் கொண்டது. அது மூன்று முழ உயரமும் கொண்டது. அதன் மேல் இரு முழ உயரத்தில் விமானம் அமையும். இந்த விமானம் 3 தளங்களைக்கொண்டது. முதல் இரண்டு தளங்களும் வட்டவடிவமானது. மற்றையது சதுர வடிவினது. இதை தாமரை இதழ்களும் விமானந்தாங்கிப் பொம்மைகளும் கர்ணக்கூடுகளும் அலங்கரிக்கும். கர்ப்பக்கிரகத்தில் தோண்டப்படும் குழியில் விதியபண்டாரத்தின் அஸ்தி வைக்கப்படும். அதன்மேல் பீடத்தில் லிங்கம் ஸ்தாபிக்கப்படும். பலிபீடமாக எருது அமையும் தேவி!..."

## பூதவராயர் கோவில்

அந்நேரம் காவலன் ஒருவன் வந்தான்.

"மன்னனுக்கு வெற்றி உண்டாகுக.சேனாதிபதி சண்பகமாதாக்கர் அவசரமாக தங்களை காண வந்துள்ளார்"

வயோதிபத்தின் சின்னங்கள் சேனாதிபதி சண்பகமாதாக்கரின் இரும்பு உடலில் காணப்பட்ட போதிலும், முறுக்கேறிய கரங்களும் சக்தி வாய்ந்த கண்களும் அவரது வீரத்தில் வயோதிபம் இல்லையென்பதை நிரூபித்தன. வேகமாக குதிரை யில் வந்தகளைப்புமின்றி அவர் அறிவித்த செய்தி மன்னனின் விழிகளை கொவ்வைப் பழங்களாக்கின.

"போர்த்துக்கேய கப்பித்தான் கொன்ஸான்தினோ த பிரகன்ஸா என்பவன் எம் மீது படையெடுத்துள்ளான். படை புறப்பட்டு விட்டதாம்."

"புறப்பட்டு விட்டார்களா? வெகு காலமாக எதிர்பார்த்தேன். நல்ல தொருபாடம் புகட்டி அனுப்ப வேண்டும். வரட்டும் ..."

"அவர்களின் படையில் 1200 போர் வீரர்கள் இருக்கலாமென நமது ஒற்றர்கள் மதிப்பிட்டுள்ளனர். 92 மரக்கலங்களுடன் கோவையிலிருந்து படை புறப்பட்டு விட்டதாம். மேலும்..."

"மேலும்...?"

"மேலும்கொச்சி துறைமுகத்தில் 92 போர் மரக்கலங்கள் சேர்ந்துள்ளனவாம்."


"வேறு...?"

"அவர்களிடம் பீரங்கிகள் பொருந்திய போர்கப்பல்கள் உள்ளன. துவக்குகள் நூற்றுக்கணக்கில் உள்ளன."

சங்கிலி அரசன் சற்று அமைதியானான். ஏதோ யோசிப்பவன் போல குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

"சேனாதிபதி எதிரிகளின் படைகள் எங்கு தரை இறங்கும்?"

"தலைநகருக்கு கிட்டத்தான் இறங்குவார்கள். நாற்றிசைப் படைத் தலைவர்களுக்கும் செய்தி அனுப்பியுள்ளான். பிரதேச அதிகாரிகள் படையுடன் புறப்பட்டிருப்பார்கள். பட்டத்து இளவரசர் புவிராசர் தனது படையுடன் தங்கள் அனுமதிக்காகத் தயார் நிலையிலுள்ளார்."



தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள பூதவராயர் ஆலயம்-திருநெல்வேலி

"அவர்கள் பண்ணைத்துறையில் இறங்கட்டும். கரையோரம் எங்கும் எமது வீரர்கள் நிற்கட்டும்... பண்ணைத்துறை முதலையின் வாயில் போன்றது. நாலாதிசைகளிலிருந்தும் தாக்கலாம்."

போர்த்துக்கேய தளபதி பிரகன்ஸா யாழ்ப்பாணத்தின் மேல் படையெடுக்க பல காரணங்கள் இருந்தன. முக்கியமானது ஆதிக்க வெறி. ஆயினும், மன்னாரில் சங்கிலி நடாத்திய சம்காரத்தை, கோவையிலிருந்த பாதிரியார் பிரான்சிஸ் சவேரியர் எனும்பிரதமகுரு மறக்கவிடவில்லை. போர்த்துக்கேயரிடம் அடைக் கலம் புகுந்த அப்பாமுதிலி, காக்கைவன்னியன், பரராசசிங்கன், காசிநயினார் ஆகியோர் தந்த இடையறாத இம்சை எல்லாம் சேர்ந்து படையெடுக்கவைத்தன. படைக் கலங்கள் புறப்படத் தயாரான நிலையில் பிரகன்ஸா அவர்களை அழைத்தான்.

"உங்கள் போர்க்கலங்கள் எவ்வாறு செல்லப்போகின்றன தளபதியாரே?" என்று அப்பாமுதலியை வியப்போடு பார்த்தான் பிரகன்ஸா.

"இதென்ன கேள்வி அப்பா முதலியாரே? வழமை போல பண்ணைக் கரையில்தான். அனலை தீவுக்கும் காரைதீவுக்கும் இடையில் ஊர்காவற்றுறைக்கடலில் பிரவேசித்து வேலணைத்தீவுக் கரையோரமாக மண்டை தீவை அடைந்து யாழ்ப்பாணக் கடனீரேரிக்குள் பிரவேசிப்போம்..."

"சங்கிலியும் அதனை எதிர்பார்த்து படைகளை நிறுத்தியிருப்பான். யாழ்ப்பாண கடனீரேரிக்குள் பிரவேசிக்க இரண்டு படைகள் உள்ளன."

செங்கை ஆழியான்

(தொடரும்)



# ஈழத்தமிழர்கள் தோற்கடிக்கப்படவில்லை- அழிக்கப்பட்டிருக்கிறார்கள்

ஊடகவியலாளர்- அமரர் டி. சிவராமின் எட்டாவது ஆண்டு நினைவில் அன்னாரின் கட்டுரைத்தொகுப்பை நூலாக வெளியிட்டு வைத்து ஊடகவியலாளர் பாஷண அபயவர்த்தன உரை



ஊடகவியலாளர் *(தராக்கி)* டி சிவராமின் எட்டாவது ஆண்டு நினைவும் காலத்தின் ***தேவை அரசியல் வேலை*** என்ற தலைப்பிலான- அவரது கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வும் அண்மையில் சூரிச் நகரில் நடைபெற்றது.

சிவராம் நினைவுப் பணிமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையாக இனப்படுகொலை- தர்மரெத்தினம் சிவராம் மீதான ஒரு மீள் வாசிப்பு என்ற தலைப்பில் ஜனநாயக ஊடக வியலாளர் சங்கத்தின் இணைப்பாளரும், ஆய்வாளருமான பாஷண அபயவர்தன நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் "கிளர்ச்சித் தடுப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக இனப்படுகொலை என்பது இராணுவ மற்றும் அரசியல் நலன்களை மாத்திரமன்றி உலகளாவிய நலன்களையும் கொண்டுள்ளது என்பதை 2003, 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே சிவராம் நன்கு கணித்திருந்தார். அவரது கணிப்பு சரியானது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டு விட்டது" எனத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சண் தவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் அரம்பத்தில் இலங்கை மண்ணில் நீதியை நிலைநாட்ட தமது இன்னுயிர்களை ஈந்த சகல இனங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கும், ஊடகப் பணியாளர்களுக்கும், அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து சிவராம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு தீபமேற்றி, மலர்மாலை அணிவித்து உரையாற்றிய பாஷண தொடர்ந்து பேசுகையில், "போலந்து நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணியான ரபாயல் லெம்கின் என்பவரே 1944 ஆம் ஆண்டில் இனப்படுகொலை என்ற பதத்தை முதன்முதலில் அறிமுகம் செய்தவர் ஆகிறார்.

நாஸி ஜேர்மனியில் யூதர்களுக்கு எதிராக ஹிட்லரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளே இனப்படுகொலை என வர்ணிக்கப்பட்ட முதலாவது படுகொலையாகக் கருதப்பட்டபோதிலும், ஆர்மேனியர்களுக்கு எதிராக துருக்கியினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளையே லெம்கின் தனது கவனத்திற்கொண்டு இந்தப் பதத்தை உருவாக்கினார். குற்றங்களுக்கெல்லாம் மேலான குற்றம் என இனப்படுகொலை என அவர் வர்ணித்தார்.

ஒரு தேசத்தை, இனத்தை, இனக் குழுமத்தை, மதத்தைப் பின்பற்றுபவர்களை முழுமையாகவோ, பகுதியாகவோ அழித்து விடுவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளையே இனப்படுகொலை என அவர் வரையறுத்தார். அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையில் அதனை ஒரு சட்டமாக மாற்றுவதற்கும் அவர், போராடி 1948-ல் வெற்றியும் பெற்றார்.

இலங்கையில்நடைபெற்ற யுத்தத்தில் இரண்டு தரப்புகள் பங்குபற்றி இருந்தன. அதனால், தாக்குதல், பதில் தாக்குதல் என்பவை ஏற்றுக் கொள்ளக் கூடியவையே. ஆனால், யுத்தத்தில் நேரடியாகப் பங்குகொள்ளாத பொதுமக்களும் திட்டமிட்ட முறையில் கொன்றொழிக்கப்பட்டமையை இனப்படுகொலை என்ற வரையறைக்குள் அடக்க முடியம்.

யுத்த காலத்தில் தளபதியாக செயற்பட்ட ஜெனரல் சரத் பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ச, அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் உட்படப் பலர் தெரிவித்த கருத்துக்கள், அவர்கள் வன்னியிலே விடுதலைப்புலிகளோடு இருந்த 3இலட்சத்து அறுபது ஆயிரம் தமிழ் மக்கள் மீது தெரிந்துகொண்டே, திட்டமிட்ட முறையில் தாக்குதல் நடத்தினார்கள் என்பதை நிரூபிக்கின்றன.

இலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்கள் விடயத்தில் இரண்டு விதமான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தனர். சந்திரிகா போன்றோர் ஆசைவார்த்தை காட்டி மக்களைத் தம்பக்கம் ஈர்க்க முயன்றனர். யுத்தப் பகுதியில் இருந்த மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்பிவைத்த அவர்கள் அதிகாரப் பரவலாக்கல் குறித்தும் அடிக்கடி பேசி வந்தனர்.

ராஜபக்ஷ போன்ற இரண்டாவது வகையினர் மக்களை வகை தொகையின்றி அழித்தொழித்தேனும் அச்சுறுத்திப் பணியவைக்கும் தந்திரத்தைக் கைக்கொண்டனர். இராணுவக் கல்வியில் *ரோமன் மாதிரி* என அழைக்கப்படும் இவ்வகைத் தந்திரோபாயத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக மக்கள் பாதிக்கப்படுகின்றார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மக்கள் தம்பக்கம் சாய்வார்கள் என அவர்கள் நினைக்கின்றனர். இதுவே இறுதி யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட தந்திரோபாயமாகும்.

பாதுகாப்பு வலயம் என்ற பகுதிக்கு வரவழைக்கப்பட்ட மக்கள் மீது தொடர்ச்சியான எறிகணை வீச்சு நிகழ்த்தப்பட்டது.அந்த மக்களின் மனவுறுதியைக் குலைத்து தங்களது கொள்கைகளை மறந்து உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் குறிக்கோளை மாத்திரம் அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதே அதன் நோக்கம்.

இத்தகைய நிலையை சிவராம் பின்வருமாறு விபரித்தார். ஒருவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றார்.கைதின் பின் அவர் கடுமையான சித்திர வதைக்கு தொடர்ச்சியாக உட்படுத்தப்படுகின்றார்.இப்போது அவரின் சிந்தனை இரண்டு விடயங்களைப் பற்றியதாகவே இருக்கும். ஒன்று அடுத்த சுற்று சித்திரவதை எப்போது தொடங்கும் என்பது. மற்றையது தன்னைக் காப்பாற்ற யாராவது வரமாட்டார்களா என்பது. இந்த உதாரணத்தை ஒரு மக்கட் கூட்டத்திற் கும் பொருத்திப்பார்க்க முடியும். பொதுவாக இப்படியான பொழுதுகளில் யாராவது ஒருவர் சித்திரவதையாளர் மத்தியில் இருந்தே உதவுபவர் போன்று வருவார். சித்திரவதைக்கு ஆட்பட்டவர் அவரைக் கடவுளுக்குச் சமமாக மதிப்பார்.

தமிழ் மக்களது மனநிலை இப்போது அவ்வாறே இருக்கின்றது. இப்பொழுது அமெரிக்காவும், ஐ.நா. தீர்மானமுமே அந்தநல்லமனிதர்கள். ஆனால், அந்த நல்ல மனிதர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையில் சம்பந்தப்பட்டவர் என்பதை மறக்கக் கூடாது. ஐ.நா. தீர்மானம் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் ஆனால், அந்த நம்பிக்கை எதனையும் அவர்களுக்குப் பெற்றுத் ராது.

தமிழ்மக்கள் தோற்கடிக்கப்பட்டதாகத் தங்களைக் கருதி வருகின்றனர். உண்மையில் அவர்கள் தோற்கடிக்கப்படவில்லை. அவர்கள் அழிக்கப்பட்டிருக்கிறர்கள் என்பதே உண்மை. ஏனவே அவர்கள் தமது மனத்தைத் தளர விடக்கூடாது.

சிவராம் அவர்களை எதிரிகள் அழித்ததன் காரணம், அவர் ஒரு ஊடகவியலாளர் என்பதற்காக மட்டுமல்ல. அவர், தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த ஒரு தலை சிறந்த புத்திஜீவி. தமிழ் மக்கள்கூட அவரைச் சரிவரப்புரிந்து கொள்ளவில்லை. மக்கள் மத்தியில் அரசியல் செய்வதற்கான இடைவெளியை இல்லாமற் செய்வதும் கிளர்ச்சித் தடுப்பு நடவடிக்கையின் ஒரு தந்திரோபாயமே. அதன் ஒரு அங்கமாகவே சிவராம் கொல்லப்பட்டார்.

அவரின்அரசியல்அறிவுதமிழ்ச் சமூகத்திற்கு மிகவும் அவசியம். இந்த வகையில் அவரின் கட்டுரைகளைத்தாங்கிய புத்தகம் வெளியிடப்படுவதைப் பாராட்டுகிறேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கைக்கு பதிலறிக்கைவிட்டு அரசியல் நடத்தும் தமிழக அரசியல் வாதிகள்

(சென்னை)

கச்சதீவை மீட்க அதிமுக ஆட்சிக் காலத்தில் முதல்வர் ஜெயலலிதா எடுத்த நடவடிக்கை




என்ன? என்று திமுக தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார். கச்சதீவை மீட்க திமுக ஆட்சியில் ஒரு நடவடிக்கையையும் கருணாநிதி எடுக்கவில்லை என்று பேரவையில் ஜெயலலிதா கூறியதற்குப் பதில் அளிக்கும் வகையில் கருணாநிதி இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கச்சதீவுவை மீட்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி சட்டப் பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை தீர்மானம் நிறை வேற்றப் பட்டுள்ளது.

கச்சதீவை மீட்கக் கோரி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுப்பதை விட்டு என்னைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு தீர்மானமா? சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி டெசோ சார்பில் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என் பதை பிரகடனப்படுத்த டெசோ அமைப்பின் சார்பில் உச்சநீதிமன்றத்தை அணுகுவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் காரணமாகவே சட்டப் பேரவையில் கச்சதீவை மீட்க வலியுறுத்தி தற்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கச்சதீவை மீட்டே தீருவேன் என்று 1991 ஆம் ஆண்டு ஜெயலலிதா சூளுரைத்தார். அவர் சபதம் செய்து 22 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் இதுவரை மீக்கப்படவில்லை.

1991 ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல்வராக இருந்த ஜெயலலிதா கச்சதீவைத் திரும்பப் பெற மத்திய அரசுடன் வாதாடவும் தேவை ஏற்பட்டால் போராடவும் அரசு தயாராக உள்ளது என்று முழங்கினார். அப்படிச் சவால் விட்டவர் கச்சதீவு பிரச்சினைக்காக ஜெயலலிதா எத்தனை முறை டில்லி சென்று பிரதமரையும் குடியரசுத் தலைவரையும் சந்தித்துள்ளார்?

கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்க்க திமுக எந்தக் காலத்திலும் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் கச்சதீவை மீட்க நாம் எல்லாக் காலத்திலும் குரல் கொடுத்து வந்துள்ளோம்.

ஆனால் 1994 ஆம் ஆண்டு முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது பிரதமராக இருந்த நரசிம்மராவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் இலங்கைக்கு சிறு தீவினை (கச்சதீவு ) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தமை இரு நாடுகளிடையேயும் நல்லுறவு ஏற்படத்தான் என்று குறிப்பட்டுள்ளார். கச்சதீவு பிரச்சனைக் காக நான் (கருணாநிதி துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை



என்றும் ஜெயலலிதா குற் றம் சாட்டுகிறார்.

1974 ஆண்டு ஓகஸ்ட் 21 ஆம் திகதி திமுக ஆட்சியில் சட்டப் பேரவையில் கச்சதீவை மத்திய அரசு இலங்கைக்கு வழங்கிய முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திமுக நிறைவேற்றிய அந்த தீர்மானத்தை ஜெயலலிதா பெயரளவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ற கூறியிருக்கிறார்.

ஆனால் தற்போது அவர் எடுத்த தீர்மானம் மட்டும் முழுமனதோடு நிறைவேற்றப் பட்டதாம். 1996, 2006 இலும் திமுக ஆட்சியில் இருந்தபோது கச்சதீவுக்காக கருணாநிதி ஒன்றுமே செய்யவில்லை என்று ஜெயலலிதா கூறுகிறார். 1991, 2001 இலும் அதிமுக ஆட்சியில் இருந்த காலத்தில் ஜெயலலிதா கச்சதீவை மீட்கச் செய்தது என்ன? என்று கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

(அ-2)

## சந்திரிகா, சிராணி இணைந்து புதிய அரசியல் கட்சி அமைப்பர்?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவும் இணைந்து புதியதோர் அரசியற் கட்சியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

புதிய கட்சி ஒன்றை உருவாக்கும் தங்களது திட்டம் தொடர்பில் இலங்கையிலுள்ள மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரபலங்கள் மற்றும் தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் பலரும் இந்தப் புதிய அரசியல் கட்சியில் இணைந்து செயற்படவுள்ளனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான வழங்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதும் இந்தப் புதிய அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் புதிய அரசியல் கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் மகன் விமுக்தி குமாரதுங்க நியமிக்கப்பட்வுள்ளார் என்பதும் தெரியவருகிறது. (அ-2)

## உலக வங்கியிடம் கடன் பெற அரசு பேச்சுவார்த்தை

(கொழும்பு)

உலக வங்கியிடம் அரசாங்கம் மேலும் கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

700 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சி எடுத்து வருகின்றது.

உலக வங்கி பிரதிநிதிகளுடன் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளும் மத்திய வங்கி பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளுக்கான கடன்களை செலுத்த உலக வங்கியிடம் இந்தக் கடன் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூர் வங்கிகளில் 17 வீத வட்டிக்கு அரசாங்கம் ஏற்கனவே 410 மில்லியன் ரூபா கடன் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## புதிய பொருளாதார ஆலோசகராக கலாநிதி இந்திரஜித் நியமனம்


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதிய பொருளாதார ஆலோசக்ராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி என்பவரே ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பொதுநலவாய நாடுகள் செயலாளர் அலுவலகத்தின் பொருளாதார இணைப்புப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

உலகப் பொருளாதார அறிஞர்களில் ஒருவராகப் போற்றப்படும் இந்திரஜித் பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் மற்றும் சசெக்ஸ் பல்கலைக்கழகப் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது.

கலாநிதி இந்திரஜித் சுமாரசுவாமி ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் போராளிகள் குறித்த முன்னாள் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமியின் சிரேஸ்ட சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



E-City ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்புவிழா அண்மையில் யாழ். ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் லயன் ஜெ.றஜீவன், பரீட்சைகள் பொறுப்பதிகாரி திருமதி மயூரிகா றஜீவன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் மாணவி ஒருவருக்கு பட்டமளித்து சான்றிதழ் வழங்குவதையும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் சுங்க வரி குறைப்பு ஜூலை மாதம் அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)

**இலங்கை- பாகிஸ்தான் இருதரப்பு வர்த்தக உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் இவ்வருட இறுதிக்குள் இடம்பெற்றுள்ள 11 ஆவது கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு கூட்டத்தொடரில் திருப்தியாக இருக்கும் என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் தெரிவித்துள்ளார்.**

**இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் காசிம் கிரேஷி அண்மையில் கொழும்பு 03 இல் அமைந்துள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வளாகத்தில் அமைச்சர் ரிஷாட் பதியுதினை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ பாகிஸ்தான் அரசாங்கத்திடம் விடுத்த வேண்டு கோளையடுத்து இலங்கையின் சில ஏற்றுமதி பொருட்கள் மீதான தீர்வைகளை பாகிஸ்தான் தளர்த்தியுள்ளது.

வர்த்தக திணைக்களத்தின் புள்ளிவிபர அடிப்படையில் இலங்கை 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் (மெ.தொ) வெற்றிலையை பாகிஸ்தானுக்கு வருடாந்தம் ஏற்றுமதி செய்கின் றது. அதனைத் தொடர்ந்து இலங்கை, தாய்லாந்து, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு ஏக வழங்குநராக ஈடுபடுகின்றது.

பாகிஸ்தான் வெற்றிலைக்கான தனது இறக்குமதி தீர்வினை 35 வீதமாக குறைத்துள்ளது. அத்துடன் தேங்காய் எண்ணெய் வரியினை 50 வீதமாவும் குறைத்து அது ஜூலை மாதத்திலிருந்து அமுலுக்கு வருவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

சார்க் பிராந்தியத்தில் இலங்கையின் தயாரிப்புக்களை வாங்குபவர்களாக இந்தியாவும் பாகிஸ்தானும் இரண்டாவது இடத்தை வகிக்கின்றன. இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 10% சார்க் பிராந்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டு வர்த்தக ஒப்பந்தம் அமுலாக்கியதிலிருந்து எமது இரு நாடுகளுக்கான வர்த்தக உறவு பாரிய அனுபவத்துடன் வளர்ச்சியுற்றது. 2005 ஆம் ஆண்டு எமது வர்த்தகம் அமெரிக்கா டொலர் 158 மில்லியனாக அதிகரித்ததுடன் 174 வீத வளர்ச்சியினை காட்டுகின்றது.

வர்த்தக சமநிலை எப்போதும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருந்து வருகிறது. பாகிஸ்தானுக்கு இயற்கை இறப்பர், காய்கறி பொருட்கள் தேங்காய் , பிரேசில் கொட்டைகள், தேயிலை, மரம், புண்ணாக்கு, புதிய வாயு டயர்கள் (இறப்பர்) தேங்காய் (கொப்பரா) எண்ணெய் ஆகியன இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகின்றன என்றார்.

இரு நாடுகளிற்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் கீழே பல வாய்ப்புக்கள் இருக்கின்றதை நான் ஒப்புக் கொள்கிறேன். எனினும் அதனை நாம் முழுமையாக பயன்படுத்தப் படவில்லை என்றார்.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கருத்து தெரிவிக்கையில்,

பலதரப்பட்ட எமது வர்த்தகம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக 4-5 வரையிலுள்ள முக்கிய பொருட்கள் மீதான வரி தளர்வை மேலும் கவனத்திற் கொள்ள முடியும்.

உதாரணமாக பாகிஸ்தானில் பாரிய சீனி தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் இலங்கை சீனியினை இங்கிருந்து இறக்குமதி செய்வதில்லை. அத்துடன் வர்த்தக சம்மேளனம் இருதரப்பு வர்த்தகம் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு பல முதலீட்டு ஏற்பாடுகளை செய்கின்றது

தற்போது இலங்கையில் 25 முதலீட்டு சபைத் திட்டங்களில் பாகிஸ்தானிய முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ளனர். அவை ஆடைகள், இரசா யனங்கள் பெற்றோலியம், ரப்பர், பிளாஸ்டிக், தோல் பொருட்கள் உற்பத்தி, உணவு, பானங்கள் மற்றும் புகையிலை என்பனவாகும். பாகிஸ்தான் ஊடாக மேற் கொள்ளப்பட்டு ஏற்றுமதி வரி தொடர்பில் இலங்கை பல இடர்களை எதிர்நோக்குகின்றது.

ஆனால் நாம் இலங்கைக்கு மூன்று முக்கிய பொருட்களான தேங்காய் எண்ணெய், வெற்றிலை மற்றும் குப்பி போத்தல்கள் குளிரூட்டும் இயந்திரங்கள் மீதான வரி தளர்வினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் என்றார்.

கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு தொடர் கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 29-30 வரை இஸ்லாமாபாத்தில் இடம்பெற்றது. இதற்கு முதல் 2011 ஆம் ஆண்டு இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. அக்கூட்டத் தொடரில் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பில் பொருட்கள் சேவைகள், விவசாயம், சுற்றுலா, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கல்வி மற்றும் விமான சேவைகள் மற்றும் தொழில் நுட்ப உதவி, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (அ)

## சிகிச்சை பெற்றார் அசாத் சாலி

தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அசாத் சாலி விசாரணைகளுக்கென மீண்டும் இரகசிய பொலிசிற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

அசாத் சாலி வைத்தியசாலையில் இருந்து நேற்று முன்தினம் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டதாக கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இவர் கடந்த 2 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டதன் பின் உணவு உட்கொள்ள மறுப்பு தெரிவித்தமையால் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டார்.

இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இந்திய ஊடகம் ஒன்றிற்கு கருத்து வெளியிட்டதாகக் கூறியே அசாத் சாலி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மின்கட்டண சலுகை என்பது அரசின் ஏமாற்று வேலை

### தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன

மக்களுக்கு மின்கட்டண சலுகைகளை வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்திருப்பது ஏமாற்று வேலையெனவும் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணங்கள் முழுமையாக நீக்கப்படாவிடின் திட்டமிட்ட படி எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூட்டு தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்தன. தொழிற்சங்க கூட்டமைப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க, அரை அரசாங்க தனியார் மற்றும் பெருந்தோட்டம் ஆகிய துறைகளிலுள்ள ஏராளமான தொழிற்சங்கங்கள் புதிய மின்கட்டண வீதங்களை நீக்குமாறு வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடும் என்றும் தொழிற்சங்கங்கள் அச்சுறுத்தியுள்ளன.

குடும்பம் ஒன்று சராசரியாக மாதம் ஒன்றிற்கு 90 அலகு மின்சாரத்தைப் பயன்படுத்தும் போது ஜனாதிபதியின் சலுகை அறிவிப்பினால் பிரயோசனம் எதுவும் இல்லையென சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொதுச்சேவைகள் ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அன்ரன் மாக்கஸ் தெரிவித்தார்.

இக்கருத்தை அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமர சிங்கவும் வலியுறுத்தினார்.

புதிய மின் கட்டணங்களை அரசாங்கம் அகற்றாது விடின் திட்டமிட்டவாறு நாம் மேற்குறித்த திகதியில் வேலை நிறுத்த போராட்டத்தில் குதிப்போம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜாதிக சேவை சங்கத்தின் பேச்சாளர் சுனில் டி சில்வா தெரிவித்தார். (அ-2)


## சித்திரை மாதத்து வெயில்

(கொழும்பு)

வருடா வருடம் சித்திரை மாத வசந்த காலத்தையொட்டி வருவதும் சுபகாரியங்களுக்கு விலக்களிக்கப்பட்ட காலமாக உள்ளதுமான அக்கினி நட்சத்திரம் (கத்திரி வெயில்) நேற்று முன்தினம் சனிக்கிழ்மை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முடிவடைகின்றன.

இந்த அக்கினி நாள் காலங்களில் கிரகப் பிரவேசம், திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு விலக்களிக்கப்பட்ட நாட்கள் எனவும் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் (தானிய வகை) நாற்று நடும் வேலைகளை செய்யக்கூடாது எனவும் நிழல் தரம் விருட்சங்களை கத்தி கொண்டு வெட்டியழிக்கக் கூடாது எனவும் இந்து மத சாஸ்திர நூல்களில் சொல்லப்பட்டிருப்பதுடன் இயலுமான அளவு மரங்களைப் போசிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டிருக்கின்றன.

மேலும் ஆசியப்பிராந்தியத்தின் வெப்ப வலயப் பகுதிகளில் சூரியனின் வெப்பம் மிகக் கடுமையான அளவு இருக்கும் . இந்தியாவில் இக்காலப்பகுதியில் நிலவும் கூடுதலான வெப்பத்தினால் பலர் மரணிப்பதும் சில பிரதேச பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்படுவதும் அறிந்ததே. (அ)




வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட குறும்பட காட்சியும் சிறந்த குறும்பட தேர்வும் அண்மையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற போது ... (படங்கள்:குருமன்காடுச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஈழத்தமிழ் அகதிகளை விடுவிக்கக் கோரி மக்கள் கலை இலக்கிய கழகம் மற்றும் அதன் தோழமை அமைப்புகள் சென்னையில் நடத்திய மேதினப் பேரணி, போராட்டம் குறித்த சில செய்திப் பதிவு:**

# முள்வேலிக்குள் சிறைவைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்



சிறப்பு அகதி முகாம் எனும் முள்வேலிக்குள் சிறைவைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்!

அனைத்து ஈழத்தமிழ் அகதிகளுக்கும் இரட்டைக் குடியுரிமை வழங்கு!! என்ற முழக்கத்துடன் மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் மேதினத்தன்று சென்னையில் பேரணி மற்றும் பொலிஸ் டி.ஜி.பி அலுவலகத்தின் மீதான முற்றுகைப்போராட்டம் ஆகியவற்றை நடாத்தின. இந்தப்பேரணி - முற்றுகைப் போராட்டத்தில் தமிழகம் முழுவதிலுமிருந்து மேற்குறித்த கட்சி உறுப்பினர்கள், மக்கள், மாணவர்கள் சுமார் 5000 பேர் கலந்து கொண்டனர்.

காலை 10 மணிக்கு பூக்கடை பொலிஸ் நிலையம் முன்பாக மக்கள் கலை இலக்கிய கழகத்தின் கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பெரும் திரளான மக்கள் கூடி இருந்தனர்.

"இருட்டு கும்மிருட்டு", "ஏன் என்ற கேள்வியைக் கேள் ", "காங்கிரசு என்றொரு கட்சி "ஆகிய பாடல்கள் மக்களி டையே நல்ல வரவேற்பைப் பெற்றன.

உயர் நீதிமன்றத்திலிருந்து கடற்கரைச் சாலையில் உள்ள டி.ஜி.பி அலுவலகம் நோக்கி பேரணி சென்று டி.ஜி.பி. அலுவலகத்தை முற்றுகையிடுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், பொலிஸ் அதற்கு அனுமதி மறுத்தது. பூக்கடைப் பொலிஸ் நிலையத்தில் ஆரம்பித்து மெமோறியல் அரங்கு நோக்கி பேரணி நடத்த மட்டும்தான் அனுமதி வழங்கினார்கள். மெமோறியல் அரங்கம் தாண்டி பொலிஸ் தடையரணை மீறி அண்ணாசாலை வழியாக டிஜிபி அலுவலகம் போவதாக முடிவு செய்யப்பட்டது.

பேரணிக்கு தலைமைதாங்கிய புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணியின் மாநிலத் தலைவர் முகுந்தன், தமிழக அகதி முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் அகதிகளின் விடுதலைக்காக கடந்த ஒரு மாதமாக நடத்தப்பட்ட மாநிலம் தழுவிய பிரசார இயக்கம் பற்றி விளக்கி , அதன் ஒரு பகுதியாக சென்னையில் டி.ஜி.பி அலுவலகம் முற்றுகை நடைபெறவுள்ளது என்று தெரிவித்தார்.

அடுத்து பெண்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த அஜிதா பேசுகையில் ,

"கடந்த இருமாதங்களாக ஈழத்தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்திய இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷவை தண்டிக்கக் கோரி தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கானவர்கள் வீதிகளில் இறங்கி போராடினார்கள். அந்தப் போராட்டங்கள் தொய்வடையாமல் உந்தித் தள்ளக்கூடிய சக்தியாக இருந்தவை நம்முடைய அமைப்புகள். அந்த போராட்டங்களின் தொடர்ச்சியாக , ராஜபக்ஷ உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை தண்டிப்பது என்கிற கோரிக்கையோடு, தமிழகத்தில் சிறப்பு அகதிமுகாம் என்ற பெயரில் முள்வேலிக்குள் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்களை விடுதலை செய்! , அனைத்து ஈழத்தமிழ் மக்களுக்கும் இரட்டைக் குடியுரிமை வழங்கு என்ற முழக்கங்களோடு கடந்த ஒரு மாதமாக தமிழகம் முழுவதும் பிரச்சார இயக்கம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக இன்று முற்றுகை போராட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கையில் நடந்த போரால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாக போயிருக்கிறார்கள். இந்தியாவுக்கும் வந்திருக்கிறார்கள். கை, கால்களை இழந்து, உறவுகளை இழந்து, நாட்டை இழந்து வந்திருக்கிறவர்களின் உண்மை யான நிலை என்ன?" என்று கேட்டு சிறப்பு முகாம்கள் என்பவை சித்திரவதைக் கூடாரங்களாக இருக்கின்றன என்பதை விளக்கும் சம்பவங்களைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இந்தியா முழுவதும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை கொடூரமானது. இந்த நாட்டின் சுதந்திரமான குடிமக்களாக வாழும் அவர்கள் இரண்டு வயதுக் குழந்தை முதல் முதியோர் வரை பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸ்காரர்கள்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் முக்கிய குற்றவாளிகளாக இருக்கிறார்கள். இந்த பொலிஸ்காரர் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற சூழலில் சிறப்பு முகாம்களில் வாழும் ஆதரவற்ற அகதிகளின் நிலைமை மிகவும் கொடூரமானதாக உள்ளது. முகாம்களில் வசிக்கும் பெண்கள் எந்தநேரத்திலும் பொலிஸால் வேட்டையாடப் படக்கூடிய நிலையில் அடிமைகளைப் போல இருக்கிறார்கள். அந்த வகையில் அகதி முகாம்களை இழுத்து மூடி, அவற்றில் அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுதலை செய்வதற்கு புரட்சிகர அமைப்புகள் சர்வதேச பாட்டாளி வர்க்கம் என்ற முறையில் எப்போதும் துணை நிற்கும்" என்று பேசினார்.

புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த ஓவியா.

"உலகம் முழுவதும் பல நாடுகளில் அகதிகள் இருக்கிறார்கள். ஈழத்தமிழர்களும் பல நாடுகளுக்கு அகதிகளாக போயிருக்கிறார்கள். எந்த நாட்டிலும் அவர்கள் தமிழ்நாட்டில் நடத்தப்படுவதைப்போல நடத்தப்படுவதில்லை. பல நாடுகளில் அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் அரசு ஏன் இப்படி நடத்துகிறது என்றால், என்றுமே தமிழக அரசும் இந்திய அரசும் ஈழத்தமிழருக்கு எதிரானதுதான். **இதே இந்தியாவில் பங்களதேஷ், பர்மா போன்ற நாடுகளில் இருந்து வந்த அகதிகள் சுதந்திரமாக இருக்கிறார்கள். அவர்கள் இதுபோல முள்வேலி முகாம்களில் இல்லை.**

இந்த ஈழத்தமிழ் அகதிகளின் பிரச்சினைக்காக நக்சல்பாரி அமைப்புகளாகிய நாங்கள் தொடர்ந்துபோராடுவோம். ஈழத்தமிழ் மக்களுக்குத் துணைநிற்போம். சர்வதேச பாட்டாளி வர்க்கம் என்ற முறையில் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்களைத் தொடந்து நடத்துவோம்" என்று பேசினார்.

அதைத்தொடர்ந்து மெமொரியல் அரங்கம் நோக்கி, விண்ணதிரும் முழக்கங்கள் எழுப்பியபடி நூற்றுக்கணக்கான குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள், முதியவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் எல்லாப்பிரிவினரும் என 5000 பேர் பேரணியாகச் சென்றனர். இருபுறமும் நின்ற மக்களும் கடைக்காரர்களும் பேரணியின் முன்பு கொண்டுசெல்லப்பட்ட அகதிகள் முகாமின் உருவப்படங்களின் மாதிரியினால் கவரப்பட்டார்கள்.

மெமோரியல் அரங்கு அருகில் வந்து சேர்ந்தபேரணியை பொலிசார் தடுப்பரண் அமைத்து தடுத்து நிறுத்தினார்கள்.

மக்கள் கலை இலக்கிய கழகத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் மருதையன் கண்டன உரையாற்றினார்.

சிறப்பு அகதிகள் முகாம் என்பது எப்படிப்பட்ட சித்திரவதைக் கூடமாக செயற்படும் என்பதை பல சம்பவங்கள் மூலம் விளக்கினர். சிறப்பு அகதி முகாமில் பொலிஸ், கியூபிரிவுத்துறைகளைச் சேர்ந்தவர்களின் கொட்டம், ஆதிக்கம், வெறியாட்டம் இவற்றை அம்பலப்படுத்தினார்.

"பலநூற்றுக்கணக்கான ஈழத்தமிழ்ப் பெண்களை அவர்கள் சீரழித்திருக்கின்றனர். இந்தநிலைமைகளைச் சகிக்க முடியாமல் பல்ர் அவுஸ்திரேலியாவுக்குப்போக முயற்சிக்கின்றனர். 7000 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அவுஸ்திரேலியாவுக்குப் படகில் போக முடியாது. ஆனாலும் போகிறார்கள். ஏன்? இந்தக்கேள்வியை காவற்றுறையைச் சேர்ந்த சைலேந்திரபாபு கேட்டார். அதற்கு ஆபத்து **என்று தெரியாமலாபோகிறோம்? ஆனால், எப்படியாவது கியூ பிரிவிடம் இருந்தும் பொலீசிடம் இருந்தும் தப்பிவிடத்தான் போகிறோம்** என்று ஈழத்தமிழர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**1987 இல் இருந்து தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அகதி முகாம்கள் 8×8 அளவிலான தகரக்கொட்டகைகள்தான். பகல்நேரத்தில் மின்சாரம் கிடையாது. இரவில் ஒரேயொரு குண்டு பல்புக்கு மட்டும் மின்சாரம் கிடைக்கும். 6 மணிக்குள் வந்து அடைந்துவிட வேண்டும். வேறுமுகாமில் இருக்கும். உறவினர் யராவது, அப்பா செத்துப்போய்விட்டால் கூட உடனேயே போகமுடியாது. ஆர்.டி.ஓ கையெழுத்து வேண்டும். ஆர்.டி.ஓ கையெழுத்து வாங்குவது சாதாரண விடயம் கிடையாது.**


மேதினம் என்பது பாட்டாளி வர்க்கம் தன்மீதான ஒடுக்குமுறைக்கெதிராக போராடுவதோடு, தன்னைப்போலவே ஒடுக்கப்படுகிற பிறபிரிவனருக்காகவும் போராடும்நாள். அந்தவகையில், அகதிமுகாம்களில் ஈழத்தமிழர்கள் விடுதலை, இரட்டைக்குடியுரிமை என்றும் நம்முடைய கோரிக்கையை வைத்திருக்கிறோம்.

அகதிகள் தம்நாட்டில் விட்டுவந்த இடங்கள் எல்லாம் இலங்கை அரசால் இராணுவத்திற்கும், தரகு முதலாளிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்திய அரசு ஈழத்தமிழருக்கு எதிரானது என்று வலியுறுத்துகிறோம். சுயநிர்ணய உரிமைக்காகவும், ஒடுக்கு முறைக்கெதிராகவும் இந்தியாவில் உள்ள புரட்சிகர சக்திகளாகிய நாம் தொடர்ந்து போராடு வோம்" என அவரது உரை அமைந்திருந்தது.

பேரணி பொலீசார் அமைத்திருந்த தடையரணை மீறி முன்னேறிச்செல்லும்போது பொலிசார் கட்சி உறுப்பினர்களை கைது செய்து அழைத்துச்சென்றனர். கைது செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் சென்னை ராயபுரத்திலுள்ள 5 திருமண மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அனைத்து மண்டபங்களிலும் கருத்தரங்கம், பொதுக் கூட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

-இணையம்-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய குடியுரிமை இல்லையேல் அவுஸ்திரேலியாவுக்கு பயணிப்போம்

## இலங்கை அகதிகள் உறுதி

இந்தியக் குடியுரிமை கிடைக்கா விட்டால் நிச்சயமாக அவுஸ்திரேலியா் செல்வோம் என இலங்கைத் தமிழக அகதிகள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் அவுஸ்திரேலியா செல்வதைத் தடுக்கும் வகையில் கடலோர பொலிஸார் மற்றும் கியூ பிரிவு பொலிஸார் அகதி முகாம்களில் விசாரணை நடத்தி அறிவுரை கூறி வருகின்றனர்.

தமிழகத்தில் இலங்கை தமிழர் முகாம்களில் வசிப்போர் படகுகளில் அவுஸ்திரேலியா தப்பி செல்வது அதிகரித்து வருகிறது.

மண்டபம், விழுப்புரம், விருதுநகர் உள்ளிட்ட முகாம்களில் இருந்து தப்ப முயன்ற 88 இலங்கைத் தமிழர்களை பெங்களூரில் கர்நாடக பொலிஸார் மீட்டு அவரவர் தங்கியிருந்த முகாம்களுக்கு அனுப்பிவ்வத்தனர். இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள அகதி முகாம்களில் கியூ பிரிவு பொலிசார் மற்றும் கடலோர பாதுகாப்பு படை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி அறிவுரை வழங்கி வருகின்றனர் .

ஓசூர் கெலவரப்பள்ளி முகாமில் விசாரணை நேற்று முன்தினம் நடந்தது . அப்போது . ஆபத்தான பயணம் மேற்கொணடு தப்பி செல்ல வேண்டாம். முகவர்கள் அவுஸ்திரேலியா அழைத்துச் செல்வதாகக் கூறி பணம் வசூலித்து விட்டு மோசடி செய்து விடுவர். அதனால் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என அறிவுரை கூறினர்.

அதற்கு இலங்கை தமிழர்கள் குடியுரிமை இல்லாமல குழந்தைகள் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது. அகதிகளாக 25 ஆண்டுகளாக வசிக்கிறோம் .அதனால் முதலில் குடியுரிமை வாங்கி கொடுங்கள் என்று கேட்டனர். (அ-2)

# மனிதாபிமானம் கொண்டு அசாத்தை விடுவியுங்கள்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அசாத் சாலியை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மனிதாபிமான அடிப்படையில் சாலியை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் முஸ்லிம் பேரவை கோரியுள்ளது.

அசாத் சாலியின் கைது தொடர்பில் முஸ்லிம் சமூகம் மிகுந்த கவலை கொண்டுள்ளதாக முஸ்லிம் பேரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

அசாத் சாலி நீரிழிவு மற்றும் உயர் குருதியழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் பேரவையின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் அசாத் சாலியை விடுதலை செய்யுமாறு கோருவதாக அமீன் சுட்டிக் காட்டியுள்ளார். அசாத் சாலியின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி தயவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அசாத் சாலி உணவு தவிர்ப்பு போராட்டமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



அண்ணா சிலையடி கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த லயன் மாணிக்கம் பரமானந்தம் கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீ நிதிநந்தசேகரம் முந்நிலையில் சமாதான நீதவா னாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு நிலை சிரேஷ்ட முகாமையாளரும் அண்ணா சிலையடி முத்துமாரியம்மன் தேவஸ்தான முன்னாள் தலைவரும் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் தற்போதைய தொழில் நுட்பத்திற்கான மாவட்ட இணைப்பாளருமாவார். (அ-19)

# குறைகளற்ற நாடென உலகில் எதுவுமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

இந்த உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் குற்றங்கள், குறைகள் இருக்கின்றன. சிறைச்சாலைகள் பொலிஸ் நிலையங்கள் நீதிமன்றங்கள் அற்ற நாடொன்று ஒன்றும் இல்லை. சோம்பேறியான அதிகாரிகள் அற்ற நாடு இல்லை. இருப்பினும் அபிவிருத்தி அடைந்த பலம்வாய்ந்த நாடுகள் இவற்றை முக்கியப்படுத்துவதில்லை என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பலாங்கொடை தர்மாஷோக வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, உலகிலுள்ள ஏனைய நாடுகள் தங்களுடைய நாட்டின் பெருமையை மாத்திரமே பேசுகின்றன.

ஆனால் எமது நாட்டின் ஒரு சிலர் நாட்டின் நல்ல விடயங்களைத் தவிர ஏனைய விடயங்களையே வெளிக்கொண்டு செல்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார். (அ)




* 1527-ஸ்பானிய மற்றும் ஜேர்மீனியப் படைகள் ரோம் நகரைச் சூறையாடினர். 147 சுவீடன் படைகள் புனித ரோமப் பேரரசின் மன்னன் ஐந்தாம் சார்ள்சிற்கு எதிராகப் போரிட்டு இறந்தனர்.
* 1542-பிரான்சிஸ் சேவியர் கோவாவை அடைந்தார்.
* 1682-பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் தனது கோட்டையை வேர்சாய் நகருக்கு மாற்றினான்.
* 1757-பிரெடெரிக் தலைமையிலான புருசியப் படைகள் ஆஸ்திரிய இராணுவத்தைத் தோற்கடித்து பிராக் நகரை முற்றுகையிட்டனர்.
* 1840-பென்னி பிளாக் அஞ்சற்தலை ஐக்கிய இராச்சியத்தில் (அயர்லாந்து உட்பட) பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.
* 1853- த லிட்டரறி மிரர் (The Literary Mirror) என்னும் ஆங்கில மாதிகையை யாழ்ப்பாணத்தில் வைமன் கதிரவேற்பிள்ளை ஆரம்பித்தார்.
* 1854-இந்தியாவில் முதல் தபால் தலை , வெளியிடப்பட்டது.
* 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஆர்கன்சஸ் அமெரிக்கக் கூட்டணியில் இருந்து விலகியது.
* 1889-ஈபிள் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்து விடப்பட்டது.
* 1930-ஈரானில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 4 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
* 1937-ஜேர்மனியின் ஹின்டென்பேர்க் என்ற வான்கப்பல் (zeppelin) நியூ ஜெர்சியில் தீப்பிடித்து அழிந்தது.
* 1942-இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் ஜப்பானிடம் சரணடைந்தன.
* 1945-இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராக் நகரில் ஆரம்பமானது.
* 1967-சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முஸ்லிம் குடியரசுத் தலைவரானார்.
* 1994-ஐக்கிய இராச்சியத்தையும் பிரான்சையும் இணைக்கும் கால்வாய் சுரங்கம் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
* 2001-சிரியாவுக்கான தனது பயணத்தில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் மசூதி ஒன்றிற்கு சென்றார். மசூதிக்குச் சென்ற முதலாவது திருத்தந்தை இவரே யாவார்.


### பிறப்புக்கள்

* 1856-சிக்மண்ட் பிராய்ட், ஆஸ்திரிய உளவியல் மருத்துவர் (இ.1939)
* 1861-மோதிலால் நேரு, இந்திய விடுதலை வீரர் (இ.1931)
* 1904-ஹரி மார்ட்டின்சன், சுவீடன் எழுத்தாளர் (இ.1978)
* 1953-டோனி ப்ளேர், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர்
* 1985-கிரிஸ் பால், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்பு

* 1952- மரியா மாண்ட்டிசோரி, இத்தாலிய கல்வியாளர், மனோதத்துவ மருத்துவர் (பி.1870)

### மோதிலால் நேரு



மோதிலால் நேரு (1861.05.06 -1931.02.06) ஒரு இந்தியச் சுதந்திர போராட்ட வீரரும் வழக்கறிஞரும் ஆவார். இவர் இந்திய தேசிய காங்கிரசு கட்சியின் தலைவராக 1919-1920 மற்றும் 1928-1929 என இரண்டு முறை பதவி வகித்துள்ளார்.

இந்தியாவின் பெரிய அரசியல் குடும்பமான நேரு காந்தி குடும்பத்தின் முன்னோடியாவார். இவர் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் தந்தையும் ஆவார்.

#### அரசியல்

காஷ்மீர் பண்டித் குடும்பத்தில் பிறந்த மோதிலால் நேரு அக்கால ஜெய்ப்பூர் மாநிலத்தில் வசித்து வந்தார். இவரது தாத்தா லட்சுமிநாராயன் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்தின் முகலாயப் பேரரசு நீதிமன்றத்தில் வழக்கறிஞராயிருந்தவர்.

இவர் கேம்பிரிச் பல்கலைக்கழகத்தில் பார் அட் லா என்ற வழக்கறிஞர் பட்டம் பெற்றவர்.

மகாத்மா காந்தியின் ஈர்ப்பால் 1918 இல் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். பின்னர் சுயாட்சிக் கட்சியில் இணைந்து பிரித்தானிய அரசுக்கெதிராய் போராடினார். சைமன் குழுவிடம் பேச்சு நடத்த 1928 இல் அமைக்கப்பட்ட நேரு குழுவின் தலைவராகயிருந்தவர்.

#### குடும்பம்

இவரது துணைவியார் பெயர் சொருப் ராணி. 1889 இல் ஜவகர்லால் நேரு என்ற ஒரு புதல்வரும் 1900 இல் பிறந்த விஜயலட்சுமி பண்டிட் மற்றும் கிருஷ்ணா ஹுதீசிங் என்ற இரு புதல்விகளும் இவரின் பிள்ளைகள் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழு நிலை போட்டியில் வதிரி டயமன்ஸ் சம்பியனானது

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக விளையாட்டு விழாவின் குழு நிலைப் போட்டிகளில் 62 புள்ளிகளைப் பெற்று வதிரி டயமன்ஸ் அணி சம்பியனானது.

44 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தை மாலுசந்தி மைக்கல் அணியும்; 27 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தை அல்வாய் மனோகரா அணியும்; 20 புள்ளிகளுடன் நான்காம் இடத்தை வதிரி பொம்மஸ் அணியும்; 17 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தை நவ ஜீவன்ஸ் அணியும், கரவெட்டி திருவள்ளுவர் அணியும்; 10 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்தை கரணவாய் கொலின்ஸ் அணியும் கரவெட்டி ஐங்கரா அணியும்; 7 புள்ளிகளைப் பெற்று 7ஆம் இடத்தை யங்கம்பன்ஸ் அணியும் பெற்றுக் கொண்டன.

இதில் ஆண்கள் பிரிவில் உதைபந்தாட்டத்தில் கரணவாய் கொலின்ஸ், கிரிக்கெட்டில் கரவெட்டி ஐங்கராவும், எல்லேயில் அல்வாய் மனோகராவும்,, கரப்பந்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸும், கபடியில் வதிரிபொமஸும்; தடகளப் போட் டியில் மாலுசந்தி மைக்கல் அணியும் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் உதைபந்தாட்டத்தில் கரவெட்டி திருவள்ளுவர், கிரிக்கெட்டில் வதிரி டயமன்ஸ், எல்லேயில் அல்வாய் மனோகரா, கபடியில் வதிரி டயமன்ஸ், கரப்பந்து, தடகளத்தில் மாலுசந்தி மைக்கல் அணியும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டன. (அ-3-24)

# கோரிக்கை நிறைவேற்றப்படாதுவிடின் மும்மொழித்திட்டம் செயலுருப் பெறாது

## மொழிபெயர்ப்பாளர் சங்கம் தெரிவிப்பு

தமக்கான சம்பள உயர்வைக் கோரியுள்ள அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சங்கம் தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படாதுவிடின் அரசாங்கத்தின் 10 வருட மும்மொழித்திட்டம் செயலுருப்பெறாது என கூறியுள்ளது.

மேலும் இலங்கையில் அரசாங்க மொழிபெயர்ப்பாளர்கள் 250 பேர் வரையில் மட்டுமே உள்ளனர் எனவும் இதற்கு அவர்களுக்கு குறைந்த வேதனம் வழங்கப்படுவதால் ஊழியர் விலகி விடுவதே காரணமென்றும் தற்போது மேலதிகமாக 500 மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுவதாகவும் அரசாங்க மொழி பெயர்ப்பாளர் அங்கத்தவர் எல்.யூ.எஸ் பண்டார தெரிவித்துள்ளார்.

மொழி பெயர்ப்பாளர்களின் ஆரம்ப வேதனம் 20 ஆயிரத்து 250 ரூபா ஆகும். அதி கூடிய வேதனமாக 33 ஆயிரம் ரூபாவை பெற 20 தொடக்கம் 30 வருடங்கள் தேவைப்படுமென மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்நிலையில் அரசாங்கம் சிங்களவர்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தி இரு இனத்தவருக்குமான இடைவெளியை நிரப்ப விரும்புகிறது. இதற்கேற்ப மொழிபெயர்ப்பாளர்கள் இந்த இரண்டு இனத்தவர்களுக்கும் இடையில் பாலங்களாக அமைவர் என பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (2-5)

# ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு யாழ். மாநகரசபை வரி அறவிடுகின்றது

## தமிழரசுக் கட்சியின் துணை பொதுச்செயலாளர் சீ.வீ.கே

(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆதன பெறுமதியையும் அதன் அடிப்படையிலான வரியையும் நியாயப்படுத்த முடியாத அளவிற்கு வரி அதிகரிப்பை யாழ்ப்பாண மாநகர சபை மேற்கொண்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என தமிழரசுக் கட்சியின் துணைப் பொது செயலாளரும் முன்னாள் மாநகர சபை ஆணையாளருமான சீ.வீ .கே. சிவஞானம் தெரிவித்துள்ளதோடு நியாயமான பெறுமதியை நிர்ணயித்து ஆதன வரியை விதிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாநகர சபை 2013 ஆம் ஆண்டுக்கான ஆதன பெறுமதியையும் அதன் அடிப்படையிலான வரியையும் அதிகரித்துள்ளமை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் மாநகர சபை 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆதனப் பெறுமதியும் அதன் அடிப்படையிலான வரியும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரிப்பது பற்றிய எமது அதிருப்தியையும் ஆட்சேபனையையும் பதிவு செய்து கொள்ள விரும்புவதுடன் இவ்விடயம் பற்றிய முக்கிய அம்சங்களை வரியிறுப்பாளர்களுக்கு தெளிவுபடுத்தவும் விரும்புகிறோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆட்சேபனைகளைத் தமக்குள்ள பெரும்பான்மையைக் கொண்டு நிராகரித்தே இந்த அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது. உள்ளூராட்சி மன்றங்களால் அறவிடப்படும் ஆதன வரியானது ஒவ்வொரு ஆதனத்தினதும் வருடாந்த பெறுமதி மதிப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் வரி விகித்ம் தீர்மானிக்கப்பட்டே ஆதன வரி விதிக்கப்பட்டு அறவிடப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்தவரை அது மாநகர அந்தஸ்து பெற்ற காலத்துக்கு முன்பிருந்தே 2011 ஆம் ஆண்டு வரை வரி விகிதம் பன்னிரெண்டு சதவீதமாகவே இருந்துள்ளது . இதற்கு மேலாக நீர் விநியோக வசதி பெற்ற பகுதி ஆதன வரிகள்மீது மேலதிக ஆறு வீத வரி அறவிடப்பட்டது.

எனினும் வருடாந்த பெறுமதி அப்படியே இருக்க 2011ஆம் ஆண்டு வரை பன்னிரண்டு வீதமாக் இருந்த ஆதன வரியை 2012 ஆம் ஆண்டுக்கு 18 வீதமாக மாநக்ர சபை அதிகரித்தது.

இது இவ்வாறு இருக்க 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுமதி பத்து தொடக்கம் பன்னிரெண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக பிரதேச சபைகள் கூட பத்து வீதத்திற்கு குறையாமல் வரி விதிக்கையில், மாநகர சப்ப அதை ஆறுவீதமாக தீர்மானித்துள்ளது. உண்மையில் ஆதன வரி அறிவித்தல்களுக்கு எதிராக ஒவ்வொரு வரியிறுப்பாளரும் ஆட்சேபனை தெரிவிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ள போதும் இந்த நிர்வாகத்தில் என்ன நடக்கப்போகின்றது என்று எண்ணி ஆட்சேபனை தெரிவிக்காமல் வரியை செலுத்துகின்றவர்கள் உள்ளனர்.

முதலில் 2013ஆம் ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட வருடாந்த பெறுமதி மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 238 இற்கு முரணானதும் அதை மீறுவதுமாகும். இந்தப் பிரிவின் படி புதிய அல்லது ஏற்கனவே வழங்கப்படும் சேவைகளில் மேம்படுத்தப்பட்ட சேவைகள் வழங்கப்பட்டால் மட்டுமே புதிய வருடாந்த பெறுமதி தயாரிக்கப்படலாம். இந்த இரண்டு அம்சங்கள் எதுவுமே காணப்படாத நிலையில் இந்த மீள் மதிப்பீடு சட்டத்துக்கு புறம்பானதும் சட்ட வலுவற்றது மாகும்.

மேலும் இதற்கான அனுமதியை வடமாகாண ஆளுநர் வழங்கியிருக்கக்கூடாது என்பது ஒருபுறமிருக்க பெறப்பட்ட அனுமதியும் உ ரிய காலத்திற்கு பின்பே பெறப்பட்டுள்ளது.

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்ட வருடாந்த பெறுமதி பத்து பன்னிரெண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டமை முறையற்றது என்பதையும் இச்செயற்பாடு தன்னிச்சையானதும் எதேச்சாதிகாரமனது என்பதை ஏற்றுக் கொண்டமையாலேதான் வரிவிகிதத்தை உள்ளூராட்சி மன்றங்களின் வரி விதிப்பு நியம நடை முறைகளைப் புறந்தள்ளி வரி விகிதம் 6 வீதமாக குறைத்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் ஆதன வரி ஆறு மடங்கு அதிகரித்துள்ளமையைக் காணலாம்.

உண்மையில் யதார்த்தத்துக்கு புறம்பாக எதேச்சாதிகாரமாக களநிலை புரியாதவர்களால் தயாரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் வருடாந்த பெறுமதி நிர்ணயத்தை ஒட்டுமொத்தமாக மாநகர சபை நிராகரித்திருக்க வேண்டும் . ஆனால் மாநகர சபை அதைச் செய்யவில்லை . தமது விரயச் செலவுகளையும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலான அநாவசியமாக மேற்கொள்ளப்படும் பணியாளர் நியமனங்களுக்கான கொடுப்பனவுகளையும் ஈடு செய்யவே இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நியாயப்படுத்த முடியாத வரி அதிகரிப்பு யாழ்ப்பாண மாநகர வரியிறுப்பாளர்கள் அத்தனை பேர் மீதும் நியாய மின்றி சுமத்தப்படும் சுமையாகும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புவதுடன் இந்த நேரத்திலாவது மாநகர சபை வருடாந்த பெறுமதியை நிராகரித்து நியாயமான பெறுமதியை நிர்ணயித்து ஆதன வரியை விதிக்க வேண்டுகிறோம் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

27ஆம் ஆண்டு நினைவஞ்சலி

1986 சித்திரை 29- வைகாசி 06



விடுதலையை நேசித்து
வீறு நடைபோட்ட
ஒப்பற்ற தலைவன்
சிறீ சபாரத்தினம்.!
மற்றும் அவரோடு கூட
சகோதர போரில்
படுகொலை செய்யப்பட்ட
போராளிகள்,
இயக்க ஆதரவாளர்கள்,
பொதுமக்களுக்கும்
மீண்டும் எம்
கண்ணீர் அஞ்சலிகள்.

அமரர்
சிறீ சபாரத்தினம்

(உன்னத வீரர்கள் ஒருபோதும் மரிப்பதேயில்லை)

(சி/3203)

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)
TAMIL EELAM LIBERATION ORGANIZATION (TELO)
இணையத்தள முகவரி : www.telo.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஜி அலைக்கற்றை வழக்கில் மன்மோகனையும் சிதம்பரத்தையும் சாட்சியாளராக சேருங்கள்

## சுப்பிரமணிய சுவாமி மனுத்தாக்கல்

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு வழக்கில் பிரதமர் மன்மோகன் சிங் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் அரச அதிகாரிகள் இரண்டு பேரையும் சாட்சியங்களாகச் சேர்க்க வேண்டும் என்று சி.பி.ஐ. நீதிமன்றத்தில் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி சனிக்கிழமை மனுத்தாக்கல் செய்தார்.




இந்த மனுவை ஏற்றுக் கொண்ட சி.பி.ஐ. நீதிமன்றத்தின் சிறப்பு நீதிபதி ஓ.பி.சைனி இந்த மனு மீதான வாதம் எதிர்வரும் ஜுன் மாதம் 6 ஆம் திகதி முதல் நடைபெறும் என்று அறிவித்தார்.

சுப்பிரமணியன் சுவாமி தாக்கல் செய்த மனுவின் விபரம் வருமாறு,

கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி முன்னாள் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு விரிவான கடிதம் எழுதியுள்ளார் அதை நாடாளுமன்றக் கூட்டக் குழுவும் ஏற்றுக் கொண்டுள்ளது.

அதில் பிரதமர் மன்மோகன் சிங், அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரம், நிதித்துறை இயக்குநர் ஷியாமளா சுக்லா, பொருளாதார விவகாரங்கள் துறையின் கூடுதல் செயலர் சிந்துஸ்ரீ குல்லர் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான விதிமுறைகளை இறுதி செய்ய 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மற்றும் 2008 ஆம் ஆண்டு ஜனவரி ஆகிய மாதங்களில் பிரதமர் மன்மோகன்சிங், ப.சிதம்பரம், ஆ.ராசா ஆகியோருக்கு இடையே நடைபெற்ற முக்கிய கூட்டங்கள் குறித்த விவகாரங்களை ராசா அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்துடன் இணைத்துள்ள ஆவணங்கள் 2ஜி வழக்கில் முறைகேடுகள் நடைபெற்றதற்கான புதிய காரணங்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆகையால் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு ஆ.ராசா வழங்கியுள்ள முழுக் கடிதத்தையும் இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் நாடாளுமன்றக் கூட்டுக்குழு நாடாளுமன்றப் பொதுக் கணக்குகள் குழு ஆகியவற்றின் வரைவு அறிக்கைகளையும் சி.பி.ஐ. நீதிமன்றத்தில் அளிக்க உத்தரவிட வேண்டும்.

இந்த வழக்கில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதை நிரூபிக்க ஆ.ராசா கடிதத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் முக்கிய சாட்சியங்களாக உள்ளனர். இந்த வழக்கு தொடங்கும்போது அவர்களை ராசா குறிப்பிடவில்லை.

ஆகையால் ராசா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பிரதமர் மன்மோகன்சிங், அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரம், நிதித்துறை இயக்குநர் ஷியாமளா சுக்லா, பொருளாதார விவகாரங்கள் துறையின் கூடுதல் செயலர் சிந்துஸ்ரீ குல்லர் ஆகியோரை நீதிமன்றத்தில் சாட்சியாக ஆஜராக உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

பாரதச் செய்தி

# இலங்கை ஜனாதிபதியை தண்டிக்கும் வழியை கூறுகிறார் சுப.வீரபாண்டியன்

ஈழத் தமிழர்களின் பிரச்சினை சர்வதேச சிக்கலாக மாறியிருக்கிறது. இந்நிலையில் உணர்வாளர்கள் எல்லோருமே இரண்டு விடயங்களுக்காகப் போராடுகிறோம்.

ஒன்று சர்வதேச குற்றவாளியாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அறிவித்து தண் அவர் தண்டிக்கப்பட வேண்டும்.

மற்றொன்று ஐ.நா. சபை பொது ...க்கெடுப்பு நடத்தி தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்.

இந்த இரண்டு விடயங்களும் எந்த வகையில் சாத்தியமானவை என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொள்வது அவசியமாகும் என பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, லயோலா கல்லூரி, நந்தனம் கலை கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளின் மாணவர்கள் இணைந்து தமிழீழ ஆதரவு மாணவர்கள் கூட்டமைப்பு என்கிற புதிய அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

ஈழம் தொடர்பான முதல் கருத்தரங்கை இந்த அமைப்பினர் சென்னையில் நடத்தினர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் ஈழச் சிக்கலும் உலக நாடுகளும் என்கிற தலைப்பில் உரையாற்றுகையில்,

ஈழச் சிக்கலின் நீளம் அகலம் புரியும். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தண்டிக்கப்பட வேண்டியவர். இதில் மாற்று கருத்து யாருக்கும் இல்லை. அவரைத் தண்டிக்க வேண்டுமானால் எப்படி தண்டிப்பது? யார் தண்டிப்பது? தண்டனை கொடுக்க யார் உரிமை பெற்றவர்கள்? என்கிற கேள்வி எழுவது இயல்பு. சர்வதேச நீதிமன்றம்தான் தண்டிக்க முடியும். அப்படியானால் யார் வழக்குப் போடுவது? தமிழக அரசா? இந்தியாவா? இல்லை... அமெரிக்காவா?

யாரும் போட முடியாது. ஐ.நா. பாதுகாப்பு சபை (செக்யூரிட்டி கவுன்சில்) மட்டுமே வழக்குப் போட முடியும். வழக்குப் போட செக்யூரிட்டி கவுன்சிலை யார் நிர்ப்பந்திக்க முடியும்? ஐ.நா. மனிதவுரிமை கவுன்சில்தான் நிர்ப்பந்திக்க அதிகாரம் பெற்றது.

ஒரு நாட்டின் மீது போர்க்குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் மனிதவுரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் ஐ.நா. மனிதவுரிமை கவுன்சிலில் தீர்மானமாக கொண்டு வரும்போது விசாரணை, புலனாய்வு என இரண்டு விடயங்களில் தான் கவனிக்கப்படும்.

அதில் விசாரணை என்பது முதலில் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நாடே விசாரணை நடத்துவது. அடுத்து சுதந்திரமான சர்வதேச விசாரணை. அதன் அடிப்படையில் புலனாய்வு நடத்தப்பட வேண்டும்.

புலனாய்வு செய்த பின்பு தரப்படும் அறிக்கை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தாக்கல் செய்யப்பட்டு அங்கு ஏற்கப்படும் பட்சத்தில் அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு கவுன்சில் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடரும். ஆக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கே இவ்வளவு நடைமுறைகள் இருக்கின்றன.

இந்த நிலையில் இலங்கை அரசை தண்டிப்பதற்கான ஸ்டேஜ் எதுவரை வந்திருக்கிறது? இலங்கை ஜனாதிபதியைத் தண்டிப்பதற்கான விவகாரத்தில் புலனாய்வு ஸ்டேஜ் முடிந்திருக்கிறது. இந்த அறிக்கை மனிதவுரிமை சபையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அங்கு நிறைவேற்றப்பட்ட பின்பு அது பாதுகாப்பு கவுன்சிலில் தாக்கல் செய்யப்படும். ஓ.கே. அந்த ஸ்டேஜ் வரை வந்துவிட்டது என வைத்துக் கொள்வோம்.

பாதுகாப்பு கவுன்சிலில் நமது எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா என்றால் அது கடினம்தான். ஏனெனில் பாதுகாப்பு கவுன்சிலில் 15 நாடுகள் இருக்கிறது. இதில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சீனா ஆகிய 5 ஆம் நிரந்தர நாடுகள். ஏனைய 10 நாடுகள் சுழற்சி அடிப்படையில் உள்ளே நுழைய முடியும்.

இப்படியிருக்கும் நிலையில் இலங்கை அரசை தண்டிப்பதற்கான தீர்மானத்தை பாதுகாப்பு கவுன்சிலில் உள்ள நாடுகள் ஒப்புக் கொள்ளுமா? நாம் இந்தியா துரோகமிழைத்து விட்டதாக நினைக்கிறோம். அது உண்மைதான்.

ஆனால், இந்தியாவைவிட 100 மடங்கு துரோக நாடாக இருப்பது சீனாதான். இந்தியாவை விட சீனாவைத்தான் இலங்கை அதிகம் நம்புகிறது. நட்பு நாடாகவும் நினைக்கிறது. அந்த சீனா கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடாக இருப்பது நமக்குப் பெரிய முட்டுக்கட்டை. காரணம், கவுன்சிலில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒரு நாடு ஏற்க மறுத்தாலும் தீர்மானம் நிறைவேறாது. அதற்கு வீட்டோ பவர் என்றும் அர்த்தம்.

இங்கு பெரும்பான்மை, சிறுபான்மை என்கிற விதியெல்லாம் கிடையாது. அந்த வீட்டோ பவர் கொண்டுள்ள நாடாக சீனா இருப்பதால்தான் மிகவும் தெம்பாக இருக்கிறார் இலங்கை ஜனாதிபதி. அதனால்தான் இந்தியாவை விட சீனாவை கைக்குள் வைத்துக் கொள்ள அவர் விரும்புவது. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் நிறைவேறினால் தானே சர்வதேச நீதிமன்றத்துக் வழக்குப் போகும். வழக்கே போகா முடியாத போது இலங்கை அரசை எப்படி தண்டிக்க முடியும்?



அப்படியானால் இலங்கை அரசைத் தண்டிக்கவே முடியாதா? முடியும். எப்படி? புலனாய்வு குழுவின் விசாரணை இலங்கை அரசை போர்க்குற்றவாளி என தெரிவித்து அறிக்கை தாக்கல் செய்தால் போதும். அப்படி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால் உடனே ஜனாதிபதி பதவியை அவர் இழப்பார்.

ஒரு நொடி கூட ஜனாதிபதியாக அவர் நீடிக்க முடியாது. அப்போது அவருக்குரிய இராணுவ பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களும் பறிபோகும். அப்போது அதிகாரமற்ற இலங்கை ஜனாதிபதியை ஆதரிக்க சீனா முன்வருமா என்பது கேள்வி.

> “ வீழ்வது இழிவு
> அல்ல.
> வீழ்ந்து
> கிடப்பதுதான்
> இழிவு.
> தமிழீழம் நிச்சயம்
> வெல்லும்

அந்தக் காலம் வரும். வந்தே தீரும். அதனால் இந்த அளவில் புரிந்து கொள்ளுங்கள். போதும். அடுத்தடுத்த சந்திப்புகளில் நான் மற்றவைகளை விபரிக்கின்றேன். அதுவரை உணர்வுமிக்க உங்களது போராட்டங்கள் தொடரட்டும்.

வீழ்வது இழிவு அல்ல. வீழ்ந்து கிடப்பதுதான் இழிவு. தமிழீழம் நிச்சயம் வெல்லும் என்று ஈழச் சிக்கலை மிக எளிமையாக விபரித்தார் சுப.வீ. உணர்வுகளால் மாணவர்களிடம் எதிரொலித்த கைதட்டல் நிற்க நெடுநேரம் ஆனது. (அ-2)




காஷ்மீர் மாநிலம் லடாக்கில் சீன இராணுவம் ஊடுருவி இருப்பதை எதிர்த்து ஜம்முவில் பாடசாலை மாணவ மாணவிகள் பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தெற்காசியாவில் முன்னோடியாக திகழ்கிறது

## ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை தலைவர்

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தெற்காசியாவிலேயே முன்னோடியாக திகழ்கிறது என அதன்பணிப்பாளர் சபைத் தலைவர் குமார் நடேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் கடந்த 3 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இவ்வருடம் அதன் பணியில் 10 வருட நிறைவையும் கொண்டாவிருக்கின்றது.

கடந்த 10 வருடங்களாக இலங்கையில் பத்திரிகைத் துறையினரால் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவைப் பொறிமுறை பின்பற்றப்பட்டு வருவதோடு அதற்கு மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் ஆணைக்குழுவின் அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைகள் தவறான முறையில் அல்லது பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதமான அறிக்கையிடல்களை மேற்கொள்ளும் போது அல்லது பிரசுரங்களை செய்யும் போது அத்தகைய பிரசுரங்களால் பாதிக்கப்படுபவர்கள் இந்த ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுசெய்வதன் மூலம் தகுந்த பரிகாரத்தைப் பெற்றுக் கொள்ளமுடிகின்றது.

பிரதான பத்திரிகைகள் இந்த ஆணைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிவருவதன் மூலம் பொறுப்புணர்வுள்ள ஊடகத்துறையை அவர்கள் மதிக்கின்றனர் என்பது புலனாகின்றது. அத்துடன் இந்த ஆணைக்குழு தெற்காசியாவிலே முன்னோடியாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் நடவடிக்கைகள் மிகவும் இலகுவானதாக அமைந்தாலும் இதன் தாக்கம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதோடு ஊடகத்துறையை சிறந்த தொழில் தகைமையுடைய துறையாக பரிண்மிக்கச் செய்வதோடு பொறுப்புணர்வுள்ள ஊடகத் துறையையும் ஏற்படுத்துவதாய் அமைகின்றது.

இன்றைய இந்த சந்தர்ப்பத்தில் தாங்கள் அனைவரும் இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதோடு இந்த சந்தர்ப்பத்தில் எம்மோடு முன்னோக்கிய பயணத்தில் இணைந்து செயற்படுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# மாணிக்கபுரம் கி.அ.சங்க நிர்வாக தேர்வு எப்போது?

(றெட்பானா)

மாணிக்கபுரம் கிராம அபிவிருத்தி சங்க புதிய நிர்வாகத்தினை விரைவாக தெரிவு செய்யக் கோரி கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். முன்னைய நிர்வாகத்தின் வரவு செலவுக் கணக்கறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படாத பட்சத்திலேயே புதிய நிர்வாக தெரிவுற்கான காலதாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தற்போதைய நிர்வாகம் சீரற்ற நிலையிலும் பல குழப்பங்களுடனும் காணப்படுவதால் புதிய நிர்வாகத்தை விரை வாக தெரிவு செய்யக் கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இக் கிராம மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (அ-3-260)

# கல்வியியற் கல்லூரி பீடாதிபதியாக சதாசிவம் அமிர்தலிங்கம் நியமனம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, சதாசிவம் அமிர்தலிங்கம் பீடாதிபதியாக கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் இலங்கையின் ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் மூத்த அதிகாரியாவார்.

இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தையும் (B.Sc Hons), பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முது விஞ்ஞான மாணி (பிரயோக புள்ளிவிபரவியல் M.Sc) பட்டத்தையும், தாய்லாந்து பல்கலைக்கழகத்தில் முது விஞ்ஞானமாணி (M.Sc தகவல் தொழில்நுட்பம்) பட்டத்தையும் மேலும் இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி முகாமைப் பாட நெறியையும் பூர்த்தி செய்தவர்.

ஆசிரியராக ,ஆசிரிய ஆலோசகராக, அதிபராகவும் இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் (SLES) சித்தியடைந்ததுடன் ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக, இணைப்பாளராக, உப பீடாதிபதியாகவும் கடமையாற்றினார்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் மேலதிக பீடாதிபதியாக இருந்து தற்போது பீடாதிபதி பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். மேலும் இவர் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராக, வவுனியா வளாகத்தில் வருகை விரிவுரையாளராக, தேசிய கல்வி நிர்வாக BEd, PGDE MEd விரிவுரையாளராகவும் திறந்த பல்கலைக்கழக வருகை விரிவுரையாளராகவும், கல்வியமைச்சின் வளவாளராகவும் கடமையாற்றி வருகின்றார். (அ)

# றெட்பானா கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்கவில்லை

றெட்பானா கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். மின்சாரம் பெற்றுத் தருவதாகக் கூறி பல தரப்பினரிடம் இருந்து வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்று வரை சிறிதளவேனும் நிறைவேற்றப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

அயல் கிராம மக்கள் மின்சார வசதிகளைப் பெற்றுக் கொண்டபோதிலும் இரண்டு பாடசாலைகளைக் கொண்ட றெட்பானா கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் வர்த்தகர்கள், பாடசாலைகள் போன்றவை குறிப்பட்ட சில தேவைகளை நிறைவு செய்யமுடியாத நிலையில் இருக்கின்றன.

கடந்த மாதம் இக் கிராமத்திற்கு வருகை தந்த கொழும்பு லயன்ஸ் கழகத்தினர் கூட இக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான சகல நடவடிக் கைகளும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளதாக வாக்குறுதி வழங்கினர்.

ஆயினும் இதுவரையும் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எவையும் இடம் பெறவில்லை.

எனவே இக்கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் தேவை கருதியாவது மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-260)

# துமிந்த சில்வா வைத்தியசாலையில்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சுகயீனம் காரணமாக நவலோகா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளதாக குடும்ப வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் முதலில் அனு மதிக்கப்பட்ட அவர் பின்னர் நேற்றைய தினம் காலை சாதாரண விடுதிக்கு மாற்றப் பட்டுள்ளதாகவும் அத்தகவல்கள் கூறியுள்ளன. (அ-2)



கைதடி முதியோர் இல்லத்தை அண்மித்த பகுதியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளாகியுள்ளது. நேற்று அதிகாலை இடம் பெற்ற இவ்விபத்தில் குறித்த வாகனம் வீதியைவிட்டு விலகி தொலைத் தொடர்பு மின்கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் தெய்வாதீனமாக எவரும் காயப்படவில்லை. எனினும் வாகன [illegible] துள்ளது. ([illegible])

# மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பகிரப்படவேண்டும்-த.ம.வி.புகார்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப் பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை தீவிரமாக வலியுறுத்தப் போவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறிவித்துள்ளது.

இதற்கான முடிவு கடந்த மேதினத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

இதன்படி 13 வது அரசியலமைப்பின் அம்சங்களை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று தமது கட்சி வலியுறுத்தவுள்ளதாகவும் இந்த முடிவை தமது கட்சி மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி அரசாங்கத்தின் அங்கமாக இருந்த போதும் மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு விடயத்தில் இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து செயற்படப் போவதாக அசாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மாலே-அமெரிக்கா உடன்படிக்கை இலங்கைக்கு அச்சுறுத்தலாம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மாலைதீவுடன் அமெரிக்கா செய்து கொள்ளவுள்ள உடன்படிக்கையின் காரணமாக் இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாலைதீவுடன் அமெரிக்கா ஏற்படுத்திக் கொண்டுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையின் படி அமெரிக்காவின் பாதுகாப்புத் தளம் ஒன்று மாலைதீவில் அமைக்கப்படும்.

அமெரிக்காவின் விமானங்கள் மற்றும் கப்பல்கள் மாலைதீவு கடல்பகுதிக்குள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி வந்துசெல்லமுடியும். இதன்போது அந்த விமானங்கள் மற்றும் கப்பல்கள் நிச்சயமாக இலங்கையின் கரையோர பிரதேசங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் கூடியுள்ளதை அடுத்து, அதனை கட்டுப்படுத்தும் முகமாகவே அமெரிக்கா இந்த நாடவடிக்கையை எடுத்துள்ளது.

அத்துடன் வளர்ச்சி பெற்றுவரும் இஸ்லாமிய அடிப்படைவாதம் காரணமாக இலங்கைக்கு மேலும் அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்று சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.
~ கிரீஸ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரிச் சமூகத்திற்கு

யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரிச் சமூகத்திற்கு அன்பு வணக்கம். ஆசிரியர்களை உருவாக்கும் பெரும்பணியைச் செய்யும் உங்களின் சேவைக்கு முதலில், மரியாதையுடன் தலை வணங்குகின்றோம்.

பட்டதாரி ஆசிரியர் என்ற நியமனம் தவிர்ந்த மிகுதி அனைத்து ஆசிரியர்களும் கல்வியியல் கல்லூரியின் பிரசவமாக அமைந்திருப்பது இலங்கையின் இன்றைய கல்வி முறையாகும்.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் முதல் தடவையில் சித்தியடைந்து கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படுகின்றவர் ஆகக் குறைந்தது இருபத்தொரு வயதை அடைந்திருப்பார்.

தங்கள் கல்லூரியில் ஆகக் கூடியது மூன்று ஆண்டுகள் பயிற்சியை முடித்துக் கொண்டால் இருபத்து நான்கு வயதில் ஆசிரியர் நியமனம் கிடைக்கப் பெறும்.

இருபத்து நான்கு வயதில் ஒருவர் ஆசிரியராக இருப்பதென்பதும், அவர், தரம் 9, 10, 11 மாணவர்களுக்குக் கற்பிப்பதென்பதும் மிகவும் இறுக்கமான கட்டமாகும். இங்குதான் உங்களின் பொறுப்பும் கடமையும் கட்டுப்பாடும் தேவைப்படுகின்றது. அதாவது, நீங்கள் உருவாக்கி விடுகின்ற ஆசிரிய மாணவர்கள் சுவாமி விவேகானந்தரிடம் பயிற்சி பெற்றவர்கள் போல ஆக்கப்பட வேண்டும்.

அப்போது தான் அவர்களிடம் பக்குவமும், பணிவும், மாணவர்களை ஒழுங்குபடுத்தும் திறனும், வெகுளித்தனம் இல்லாத மன உறுதியும், ஆசிரியத்துவத்தைப் பேணுகின்ற மனப்பாங்கும் உருவாகும்.

இத்தன்மைகள் ஆசிரிய மாணவர்களிடம் ஏற்படுத்தப்பட்டுவிட்டால், அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சலனப்படமாட்டார்கள் என்பதை நாம் சொல்லித்தான் நீங்கள் அறியவேண்டும் என்றில்லை.

எனவே, யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரி நிர்வாகம் தொடர்பில் அறியப்படுகின்ற மன வேதனை தரக் கூடிய தகவல்களை, நீங்கள் வேரறுப்பீர்கள் என்ற நம்பிக்கையுண்டு.

மூன்றாவது பீடாதிபதியாகப் பதவியேற்றுள்ள அமிர்தலிங்கம் அவர்கள் ஆரோக்கியமான ஆசிரிய மாணவர் சமூகத்தை உருவாக்கித் தருவார் என்ற நம்பிக்கை ஒன்றுதான்; யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சின்னத்தனங்கள் தொடர்பில் ஊடகத்துறை கடைப்பிடிக்கின்ற மௌனமாகும்.

அன்புக்குரிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களே! நீங்கள் ஆசிரியர்களைச் செதுக்கும் சிப்பிகள். நீங்கள் நிமிர்ந்து நில்லுங்கள். பீடாதிபதி மட்டுமல்ல சாட்சாத் ஈஸ்வரன் வந்தாலும் குற்றம் குற்றமே என்று கூறுங்கள்.

புகைப்படம் வைப்பதிலும் பிறந்த நாள் கொண்டாடுவதிலும் விருப்புக்கொள்ள எவரையும் அனுமதிக்காதீர்கள். உங்களிடம் வந்திருக்கின்ற ஏழை மாணவர்கள் தங்கள் ஆயுள் காலம் வரையும் உங்களை தங்கள் கண்கண்ட தெய்வங்களாகப் பூசிக்க, நீங்கள் அவதார புருஷர்களாக இருங்கள்.

நயத்தக்க நாகரிகத்துடன் எழுதிய இந்த மடலை ஏற்றுக்கொள்வீர்கள் என்றும், புதிய பீடாதிபதி புதுமை படைப்பார் என்ற நம்பிக்கையோடும் மடலை நிறைவு செய்கின்றோம்.

# அமைச்சர்களின் மின் கட்டணத்தை நாளிதழ்கள் வெளிப்படுத்த வேண்டும்

## பிக்குகள் முன்னணி சவால்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களின் மின்சாரக்கட்டணங்களை நாளிதழ்களின் ஊடாக பிரசித்த படுத்துமாறு ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணி சவால் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்த முன்னணியின் செயலாளர் தீனியாகலை பாலித்த தேரர் இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுமக்கள் தெரிவு பெற்றுக்கொள்வதற்காக நாளேடுகளில் அமைச்சர்களின் மின்சார கட்டணப் பட்டியல் வெளியிடப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

102 அமைச்சர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் அனைவரும் தலா 2 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக மின்சார கட்டணத்தை செலுத்துகின்றார்கள்.

அவர்களின் அமைச்சரவைக்கான மின்சார கட்டணமாக இருந்தால் பரவாயில்லை. மக்களுக்கான சேவை இடம் பெறுவதால் அத்னை நாட்டு மக்கள் செலுத்துவார்கள்.

ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணி என்ற வகையில் அனைத்து அமைச்சர்களுக்கும் சவால் விடுப்பதாக பாலித்த தேரர் குறிப்பிட்டார்.

மின்சார கட்டணம் தொடர்பான தர்க்கம், விவாதம், விளக்கம், கருத்து வெளிப்பாடு, கணக்கெடுப்பு, ஊழல், மோசடி என்று எந்த விடயமும் அவசியம் இல்லை. அடுத்த வாரம் வெளியாகும் நாளிதழ்களில் அமைச்சர்கள் தமது வீட்டு பாவனைமின்சார கட்டணத்தை பெயர், அமைச்சரவை மற்றும் விபரங்களுடன் வெளியிடவேண்டும் என்று அவர் சவால் விடுத்துள்ளார்.

இதனிடையே, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர்களின் கூட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, 1993 ஆம் ஆண்டு மின்சாரத்தை பெற்றுக் கொள்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருப்பின் தற்போதைய அரசாங்கம் அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

கடந்த வருடம் முறையாக செயற்படாத 46 அரச நிறுவனங்கள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டன.

அவ்வாறே, தமது ஒப்பந்தம் முறையாக இல்லை என்றால் இலங்கை மின்சார சபையையும், சுவீகரித்துக் கொள்ள இயலும்.

உண்மையை மறைக்கவே தற்போதைய அரசாங்கம் முயல்வதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தினார். (எ-11)

# முறையாக விண்ணப்பித்தால் இலங்கை செல்வதற்கு அனுமதி

## சர்வதேச சட்டத்தரணிகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தினர் உத்தியோகபூர்வமாக விண்ணப்பித்தால் இலங்கைக்கு சென்று வர விசா வழங்கப்படும் என்று இலங்கையின் பிரித்தானியாவுக்கான உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்ஸ்தானிகர் கிரிஸ் நோனிஸ், வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்றுக்கு இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

கடந்தவருடம் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தினர் உரிய காரணங்களை குறிப்பிடாமை காரண்மாகவே அவர்களின் விசா விண்ண்ப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நடவடிக்கைகளை கவனிக்கும் பொருட்டு இலங்கைக்கு வரவிருந்த சர்வதேச சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுக்கே இலங்கை அரசாங்கம் விசா வழங்கலை மறுத்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# வடமாகாணசபை தேர்தலில் ஜனநாயக கட்சி போட்டியிடும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி போட்டியிடும் என்று அக் கட்சியின் தலைவர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அறிவித்துள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியின் மாற்றுக்குழுவுடன் இணைந்தே போட்டியிடவிருப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான பாலித ரங்கே பண்டார தங்களுக்கு ஆதரவளிப்பார் என்று முன்னாள் இராணுவத்தளபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய ஆகிய மூன்று மாகாணங்களுக்கும் ஒரே தடவையில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டியுள்ளதாக அமைச்சர் ஒருவர் அண்மையில் தெரிந்தருந்தமை குறிப்பிடத்தக்காதாகும். (அ-2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அளவு முறை



உணவு சுவையாக உள்ளது என்று மேலேமேலே சாப்பிட்டுக்கொண்டே போனால் இன்றைக்கு வயிற்றுவலி,நாளைக்கு வயிற்றுப்போக்கு என்றாகும். டாக்டரிடம் போனால் நோய்க்கு மருந்து கொடுப்பார். குணமான மறுகணமே மீண்டும் அளவுக்கு அதிகமான உணவு நாடிப்போனால் வாழ்நாள் முழுவதும் வயிற்றுப்போக்கு என்ற நிலை ஏற்பட்டால் வாழ்க்கை என்ன ஆகும்? வேறு எந்தக் காரியத்தை நீங்கள் கவனிக்கமுடியும்? சாப்பிடுவதை ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன்.

அதேபோல் எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டால் உடல் வலுவிழந்து போகிறது. உடல் கெட்டால், மனம் கெட்டால் வாழ்வும் சீரழிகிறது. நாம் கொடுக்கிறோம். குடும்பம் பாதிக்கப்படுகிறது. சமுதாயம் தப்புவதில்லை.

ஐயுணர்வோடு மெய்யுணர்வு இணைந்து வரும்போது உங்களுக்கு என்ன திடம் வருகிறதென்றால் உறவிலேயே ஒரு தெளிவு. அதாவது Dctachment in attachment வருகிறது. இதுதான் உறவிலேயே துறவு நிலை. இது இல்லாது துறவு நிலை என்று தனியாக ஒன்று இருக்கவே முடியாது. அப்படியே எல்லாவற்றையும் விட்டுவிட்டுப்போவதுதான் துறவு என்றால் இறப்பவர்கள் தான் துறவு நிலைக்குப் போகிறார்கள் என்று சொல்லலாம்.

நாம் வாழும்போதே வாழ்வு நலமாக, அமைதியாக, மகிழ்ச்சியாக அமையவேண்டுமே தவிர நாம் இறந்தபின்பு [illegible] என்ன, [illegible] என்ன? அவ்வாறு வாழும்பொழுதே வாழ்வு திருப்தியாக, மேன்மையாக இருக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு அனுபோகத்திலேயும் எல்லை கட்டிக்கொள்ளவேண்டும். அளவு இட்டுக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய படைகளால் 77பேர் படுகொலை

(சுனி)



சிரிய அரசு படையின் கோரத் தாக்குதலால் 14 குழந்தைகள் உட்பட 77 சுனி முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சிரியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள பனையாஸ் நகரில் முஸ்லிம்கள் குறைவான எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர். இப்பழங்குடியினரான இவ ர்கள் மீது அரச படைகள் படுகொலைகளை அரங்கேற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இராணுவம் மற்றும் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் படை இங்கு நடத்திய வேட்டையில் சுனி பழங்குடியினர்களில் 14 குழந்தைகள் உட்பட 77 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டதாக மனித உரிமை கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

முன்னதாக சுனி பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பைதா பகுதியில் நடந்த படுகொலையில் 72 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வாரத்தில் அரசு படையினர் நடத்திய இரண்டாவது மிகப் பெரிய படு கொலை இது என தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# சிரியா மீது இஸ்ரேல் குண்டு வீசித் தாக்குதல்

(வோஷிங்டன்)

தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை விநியோகிப்பதாக கூறி சிரியா மீது இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டு வீசித்தாக்குதல் நடத்தியுள்ளன.

**தீவிரவாதிகளுக்கு ஆயுதம்**

சிரிய ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராகக் கிளர்ச்சி இடம்பெற்று வரும் நிலையில் இராணுவத்துக்கும் கிளர்ச்சிப்படைக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்று வருவதால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இதற்கிடையில் தீவிரவாதிகளுக்கு சிரியா ஆயுதம் விநியோகம் செய்வதாக இஸ்ரேல் குற்றம் சுமத்தி வருகிறது.

குறிப்பாக தங்கள் நாட்டுக்கு எதிராகச் செயற்படும் லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லாஹ் அமைப்புக்கு ஆயுதம் கொடுப்பதாக சந்தேகிப்பதோடு இதன் விளைவாக கடந்த ஜனவரி மாதம் சிரியாவில் இருந்து சென்ற வாகனங்கள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியது.

**மீண்டும் திடீர் தாக்குதல்**

இந்நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தலைமையில் கடந்த வியாழக்கிழமை இரவு பாதுகாப்பு தொடர்பான மந் திரி சபை அவசரக்கூட்டம் நடைபெற்றது.

அதில் சிரியா மீது மீண்டும் குண்டு வீச்சு தாக்குதல் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதனையடுத்து அன்று இரவே இஸ்ரேல் போர் விமானங்கள் லெபனான் வழியாகச் சென்று சிரியாவிலுள்ள குறிப்பிட்ட இடத்தில் குண்டுகளை வீசியுள்ளன. ஏற்கனவே இஸ்ரேலின் குண்டு வீச்சுக்கு இலக்கான இடத்திலேயே மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் சிரியா பகுதிக்குள் இஸ்ரேல் குண்டு வீசி தாக்கியதை உறுதி செய்துள்ளதோடு இந்தத் தாக்குதல் சிரியாவின் இரசாயன ஆயுதத் தொழிற்சாலை மீது நடத்தப்படவில்லை என்றும் சிரியாவின் வான் வெளிக்குள் செல்லாமல் ஒரு கட்டடத்தை குறிவைத்து வீசப்பட்டது என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சிரியா அதிகாரிகளும் சிரியாவின் எதிர்க்கட்சியினரும் குண்டுவீச்சு நடைபெற்றதை மறுத்துள்ளனர். எனினும் சிரியா மீது குண்டு வீசியதை நேற்று முன்தினம் பிற்பகலில் இஸ்ரேல் அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சிரியாவில் இருந்து தீவிரவாதிகளுக்கு எடுத்துச் சென்ற ஏவுகணைகள் பெட்டகத்தை குறிவைத்து எங்கள் போர் விமானங்கள் குண்டுவீசின என்று அவர்கள் விளக்கம் அளித்துள்ளனர். இக்குண்டுவீச்சில் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல் எதுவும் வெளியாக வில்லை. (அ-5)

# பவளப்பாறைகளை சேதப்படுத்திய மீனவர்களுக்கு 12 கோடி அபராதம்

பிலிப்பைன்ஸ் கடலடியில் இருக்கும் பவளப்பாறைகளை சேதப்படுத்தியவாறு பயணித்த சீன மீனவர்களுக்கு 12 அரை கோடி ரூபா அபராதமும் பல வருட சிறைத் தண்டனையும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்சில் யுனெஸ்கோ அமைப்பால் பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட நூற்றாண்டுகள் பழமையான உலகப் புகழ் பெற்ற பவளப் பாறைகள் இருக்கின்றன.

இப்பகுதிகளைக்கிழித்துக்கொண்டு சீன மீன்பிடிப்படகு ஒன்று நுழைந்தது. 3ஆயிரத்து 902 கிலோ மீற்றர் பவளப்பாறைப் பகுதிகளைக் கிழித்துச் சென்று சேதப்படுத்திய அந்த மீன்பிடிப்படகு பின்னர் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன்போது அந்தப் படகில் கடத்தப்பட்ட சர்வதேச அளவில் மிகவும் பாதுகாக்கப்பட்டு வந்த பேங்கோலின்ஸ் என்ற ஒரு அரிய வகை விலங்குகளும் நூற்றுக்கணக்கில் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இதையடுத்து குறித்த சீன மீன்பிடிப்படகில் இருந்த 12 மீனவர்களுக்கும் 12 அரைக் கோடி அபராதமும் பல வருடங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்றும் பிலிப்பைன்ஸ் கடல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த நாசகாரச் செயற்பாட்டிற்கு பிலிப்பைன்ஸ் தேசிய பூங்கா நிறுவனம் மிகுந்த பெரும் கவலை வெளியிட்டுள்ளது. (அ-5)

# ஆப்கான் தூதுவராக டாபின்ஸ் நியமனம்

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதராக ஜேம்ஸ் எஃப் டாபின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரது நியமனத்தை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் பகுதியில் அவருக்கு நீண்ட காலத்தொடர்பு உள்ளது எனவும் அவரது நியமனம் தொடர்பாக தாம் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாட்டுத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்துள்ளதாகவும் ஜோன் கெர்ரி மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதராக பல்வேறு நாடுகளில் பணியாற்றியுள்ள அவர் பொஸ்னியா, கொசோவோ, ஹைட்டி ஆகிய நாடுகளில் அமைதியும் ஸ்திரத்தன்மையும் ஏற்பட அமெரிக்க அரசின் சார்பில் பாடுபட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)



ஈரான் சென்றுள்ள மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் டெஹ்ரானின் ஜனாதிபதி அகமதிநிஜாத்தை சந்தித்து உரையாடும் போது...

# பாகிஸ்தான் குண்டு வெடிப்பில் 4 பேர் உயிரிழப்பு; 30 பேர் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானில் கட்சி தேர்தல் அலுவலகத்தில் குண்டு வெடித்ததில் 4 பேர் உயிரிழந்தனர் 30 பேர் காயமடைந்தனர். பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் எதிர்வரும் 11 ஆம் திகதி பாராளு மன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. அதை சீர்குலைக்க தலிபான் தீவிர வாதிகள் சதி நடவடிக்கை மேற்கொ ண்டு வருகின்றனர். ஆங்காங்கே குண்டுகளை வெடிக்க செய்து வன் முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தேர்தல் அலுவலகம் ஒன்றில் நேற்று முன்தினம் அங்கு சக்தி வாய்ந்த 2 குண்டுகள் வெடித்தன. அவை சில நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து வெடிக்க செய்யப்பட்டன. இச்சம்பவத்தில் கட்சி தொண்டர்கள் 4பேர் பலியாகினர்.

30பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதற்கிடையே குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பு ஏற்றுள்ளனர்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி முத்தாகிதா குவாமி இயக்கம் கட்சி மற்றும் ஏ.என் .பி கட்சி அலுவலகங்கள் மீது தங்கள் தாக்குதல் தொடரும் என தலிபான்களின் செய்தி தொடர்பாளர் இஷா னுல்லா இஷான் தெரிவித்துள்ளார். (அ-2-5)




# ஈரானின் ஐ.நா.தூதுவர் திடீரென கைதானார்

## காரணம் தெரியாமையால் சர்ச்சை

(டுபாய்)

ஈரான் நாட்டின் ஐ.நா. சபைத் தூதராகப் பணியராற்றும் பக்ஹர் அசாடி (வயது 61) திடீரென கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈரான் நாட்டின் ஐ.நா.சபை தூதராகப் பணியாற்றும் பக்ஹர் அசாடி (வயது 61) 8 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் குழுவிலும் முக்கிய பொறுப்பு வகித்துவரும் நிலையில் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் திடீரென்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தற்போது அவர் இருக்கும் இடம் வெளிப்படுத்தப்படாததோடு அவர் எதற்காக கைது செய்யப்பட்டார் என்ற விபரம் எதுவும் வெளியிடப்படாமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் தூதர் அசாடி கைது விவகாரம் பற்றிஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அலி அக்பர் சலே கருத்துத் தெரிவிக்கையில், இது தவறாகப் புரிந்துகொள்ளுதல் அடிப்படையில் நடந்துவிட்டது எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் அவரை யார் கைது செய்தார்கள் என்பதற்கு அமைச்சர் பதில் அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அறிவியல் நிபுணர்களை ஈர்ப்பதற்காக விசா நடைமுறைகளை தளர்த்தியது சீனா

விசா கடவுச்சீட்டு தொடர்பாக கெடுபிடி உத்தரவுகளை அமுல்படுத்திய சீனாவின் போக்கில் திடீர் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

அரசியல் கல்வி துறை நிபுணர்களை அதிகளவில் ஈர்ப்பதற்காக விசா விதிமுறைகளைக் தளர்த்தியுள்ளது. சீனாவுக்கு வெளிநாட்டினர் விசா வாங்கிக் கொண்டு வருவதற்கு இதுவரை கடுமையான விதிகள் கடைப்பிடிக்கப்பட்டது.

திடீரென்று வெளிநாட்டைச் சேர்ந்த திறமைசாலிகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் சீன விதிகளை தளர்த்தி இருக்கின்றது. நிர்வாகம், கல்வி, அறிவியல் துறைகளில் திறமை வாய்ந்தவர்களுக்கு உடனடியாக விசா வழங்கும் வகையில் புதிய விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இதன்படி ஆர். 1, ஆர் 2 என இரு வகை விசா வழங்கப்படுகின்றது.

ஆர் 1 விசாவில் சீனா வருபவர்களுக்கு அங்கு தங்கும் உரிமையும் வழங்கப்படுகின்றது. ஆர் 2 விசாவில் வருபவர்கள் சீனாவுக்கு எத்தனை முறையும் வந்து செல்லலாம் என்று சலுகை அளிக்கப்டுகின்றது. தொடர்ச்சியாக 10 ஆண்டு பணியாற்றினால் அங்கேயே நிரந்தரமாக தங்குவதற்கான கிரீன்கார்டும் வழங்கப்படுகின்றது. உலகம் முழுவதும் உள்ள திறமைசாலிகளை தங்கள் நாட்டின் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் புதிய கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் போல் பாஸ்போர்ட் விசா வழங்குவதில் எளிய நடைமுறைகளை பின்பற்றவும் சீனா முடிபு செய்துள்ளது. இதுபற்றி சீன நாட்டின் குடியுரிமை சட்ட சிறப்பு அதிகாரி லியு குஃபு கூறும்போது, ஆர்1 விசா பெறுபவர்கள் 5 ஆண்டு வரை சீனாவில் தங்குவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். ஆர் 2 விசா பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்கள் தொடர்ச்சியாக 180 நாட்கள் தங்க முடியும்.


இந்த நடைமுறைகள் எதிர்வரும் ஜுலை முதல் அமுல்படுத்தப்படும் என்றார். சீனா மற்றும் உலகமயமாக்கல் மைய இயக்குநர் வாங் ஹுயோ கூறுகையில், வெளிநாட்டில் உள்ள திறமைசாலிகளை இந்த விசா எளிதில் ஈர்க்கும் என்றார். (அ-2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org



# சென்னையை வீழ்த்தி மும்பை அபார வெற்றி




சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 60 ஓட்டங் களால் அபார வெற்றி பெற்றது.

நேற்றைய முதலாவது ஐபிஎல் போட்டியில் சென்னை- மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பி ற்கு 139 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது விக்கெட்டுக்காக 40 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் ஒரு கட்டத்தில் 15.1ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

இறுதி நேரத்தில் றோகித் சர்மா, ஹர்பஜன் சிங் இருவரும் சிறப்பாக ஆடியிருந்தனர்.

பந்துவீச்சில் சென்னை சுப் பர் கிங்ஸ் அணி சார்பாக ரவீந் திர ஜடேஜா 3 விக்கெட்டுக் களையும், டுவைன்பிராவோரவிச் சந்திரன் அஷ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

140 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 15.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களை மாத் திரம் பெற்று 60 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இது இத்தொடரில் அணியொன்று பெற்ற மிகக் குறைவான ஓட்டங்களாகும்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக மிற்சல் ஜோன்சன், பிரக்ஜான் ஓஜா இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், லசித் மலிங்க 2 விக்கெட்டுக்களையும்,ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக மும்பை அணியின் மிற்சல் ஜோன்சன் தெரிவானார்.

# புனேயை வென்றது ராஜஸ்தான்

புனே அணிக்கு எதிரான போட்டி யில் ராஜஸ்தான் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள் ளது.

ஐ.பி.எல். போட்டிகளில் நேற் றைய இரண்டாவது லீக் போட்டியில் புனே–ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புனே அணித் தலைவர் பின்ச் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப் பெடுத்தாடிய புனே அணியின் உத் தப்பா, பின்ச், மார்ஷ் ஆகியோரின் அதிரடியான ஆட்டம் மூலம் நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக் கெட் இழப்பிற்க்கு 178 ஓட்டத்தினை குவித்தது.

179 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற கடுமையான இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய ராஜஸ் தான் அணி டிராவிட் ,ரகானே, பின்னி ஆகியாரின் அதிரடியான ஆட்டம் மூலம் 19.5 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு தனது வெற்றி இலக்கை அடைந்தது.







துடுப்பாட்டத்தில் ரகானே 67 ஒட்டத்தி னை யும்,டிராவிட் 58 ஒட்டத்தினையும் குவித்தனர். பந்துவீச்சில் பனல் 3 விக்கெட்டைக் கைப் பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ் தான் அனியின் ரகானே தெரிவானார்.

**இன்றைய போட்டி**

**பஞ்சாப்**
**எதிர்**
**பெங்களூர்**
**இரவு 8.00 மணி**

# பொதுநலவாய மாநாட்டை...

பெறும் எனவும், அதற்கான சுபநேரத்தை தனது சோதிடர்கள் கணித்துச் சொல்வார்கள் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறி வித்திருந்தார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்துவத ற்கு கனடா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில், கமலேஷ் சர்மா மற்றும் அவ் வமைப்பினது அமைச்சரவைக் குழுவின் தலைவரான பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இலங்கைக்கு சாதகமான நிலையை அமைச் சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இந்தியா ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் மீது செல்வாக்குச் செலுத்தி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வட மாகாண சபைத் தேர் தலை நடத்துவதற்கு தேவையான கால அவகாசத்தை இந்தியா பெற்றுக் கொண்டுள் ளது.

இலங்கை அரசாங்கம் அளித்த வாக்கு றுதியின்படி நடந்து கொள்ளாதுவிட்டால், அது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடை பெறவுள்ள பொதுநலவாய அமைச்சரவைக் கூட்டத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத் தும்.

இறுதியில் இந்தியாவின் மகத்தான உதவியுடன் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்து வதற்கான மிகப்பெரிய வாய்ப்பை இலங்கை பெற்றுள்ளது என சிலோன் ருடே தெரிவித்து ள்ளது. (எ-11)

# பொது நலவாய மாநாட்டுக்கு...

மாநாட்டை நடத்தும் வாய்ப்பு பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே இம் முறை இலங்கைக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இம் மாநாட்டை உத்தியோகபூர்வ மாக ஆரம்பித்து வைப்பதற்காக பொதுநல வாய அமைப்பின் தலைவரான பிரித்தானிய மகாராணி கலந்து கொள்வாரா என்பது இன் னும் சர்ச்சையாகவே உள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு நடைபெறும் போது ஆரம்ப நிகழ்வை பிரித்தா னிய மகாராணி உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பது வழமையாகும். கடந்த முறை அவுஸ் திரேலியாவில் நடைபெற்ற மாநாட்டையும் பிரித்தானிய மகாராணியே உத்தியோகபூர்வ மாக ஆரம்பித்து வைத்தார்.

அதேவேளை பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள கனடா, கொழும்புக்கு அரச உயர்மட்டப் பிரமுகர்களை அனுப்பாது அதி காரிகள் மட்டத்திலான குழுவையே அனுப்ப வுள்ளது எனத் தெரியவருகின்றது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் கனடா முக்கியமானதொரு நாடு என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அந்நாட்டின் அரச தலைவர் மாநாட்டை பகிஷ்கரிப்பாரானால் அது இலங்கைக்குப் பெரும் ஏமாற்றமாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# உயிர் பிரிந்தாலும் பரவாயில்லை...

கைதுசெய்யப்பட்டது சட்டவிரோதமானது என்றும் தன்மீது வீண்பழி சுமத்தப்பட்டுள் ளது என்றும் குற்றம் சுமத்தும் அசாத் சாலியின் உடல்நிலை மோசமடைந்து வரு கிறது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சேலைன் ஏற்றப்படுவதையும் மருந்து களையும் மிகக் கண்டிப்புடன் ஏற்க மறுத்து வரும் அசாத் சாலி, தான் விடுதலை செய்யப் படும்வரை எதனையும் உட்கொள்ளப் போவ தில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அசாத் சாலியின் இந்த அதிரடி முடிபால் கவலையடைந்துள்ள வைத்தியர்கள் அவரு க்கு சேலைன் ஏற்றுவதற்கு பகீரத முயற்சி களை மேற்கொண்டபோதிலும் அது பலனளிக் கவில்லை.

அதேவேளை அசாத் சாலியை வைத்திய சாலையின் 55வது அறைக்குச் சென்று பார்வையிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியு மான சுமந்திரனுக்கும், அசாத் சாலியின் மனைவிக்கும் மாத்திரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் பலத்த கட்டுப்பாடான அறிவுறுத்தல்களுக்கு மத்தியில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அனுமதி வழங்கப் பட்டது.

அசாத் சாலியை பார்வையிட நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அனுமதி வழங்கிய குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அவருக்கு பல அறிவுறுத்தல்களை வழங்கிய துடன் அவரது கையடக்கத் தொலைபேசியை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை.

அசாத் சாலியை வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்டு விட்டு வந்த நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அசாத் சாலியை விசாரணை செய்து வருகின் றனா. அந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் அசாத் சாலி தனது பக்க கருத்துகளை யும் கூறியுள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் ஜூனியர் விகடனுக்கு அசாத் சாலி வழங்கிய பேட்டி குறித்தே குற்றப்புலனாவுப் பிரிவினர் விசாரித் துள்ளனர். அதற்கு அசாத் சாலி பதிலளித் துள்ளார்.

எனக்கு தமிழ் மொழியில் நல்ல பாண்டித் தியம் இல்லை. ஆனால் நான் கூறிய விடய த்தை திரிபுபடுத்தி எழுதிவிட்டனர். அதனை நான் அவர்களுக்கு உடனடியாக சுட்டிக்காட்டி எனது மறுப்பையும் ஈமெயில் மூலம் அனு ப்பி வைத்து விட்டேன் அதனை அவர்களும் ஏற்றுக்கொண்டு பிரசுரிப்பதாக கூறியுள் ளனர் என்று இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு பதிலளித்தேன் என அசாத் சாலி தன்னிடம் கூறியதாக நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (எ-11)

# அரசியலில்...

வாறெனினும், புலம்பெயர் தமிழ் மக்கள் மீளவும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி எடுத்து வருகின்றனர்.

மீண்டும் இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதனையே புலம்பெயர் தமிழர்கள் விரும்புகின்றனர்.

இவ்வாறான பிழையான வழிகாட்டல்களி னால் முன்னாள் போராளிகள் திசைமாறி விடக்கூடாது எனவும், ஜனநாயக ரீதியில் அரசி யல் நீரோட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

### உதவி முகாமையாளர் (ஆண் -1, பெண் - 1) தற்காலிகம்

01.05.2013 அன்று 26வயது–40 வயதிற்குட்பட்டவர்கள் யாழ்ப்பாணம்,நல்லூர், கோப்பாய் பிரதேசத்தில் தற்போது ஆகக் குறைந்தது 1 வருடம் வசிப்பவர்கள் மாத்திரம் நேர்முகத்தேர்விற்குத் தோற்றலாம். ஏனையோர் அனுமதிக்கப்படமாட்டார்.

கல்வித் தகைமை:

பெண்கள்: அடிப்படைத் தகைமையாக G.C.E. A/L 3 பாடங்களில் சித்தி. அத்தோடு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உள்ளகப் பட்டதாரியாக இருந்தால் நேர்முகத்தேர்வில் மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

ஆண்கள்: கட்டாயமாக அடிப்படைத் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் கணக்கியலை ஒரு பாடமாகக்கொண்ட உள்ளகப் பட்டம். வெளிவாரியாக அல்லது கணக்கியல் டிப்ளோமா ஏற்கப்படமாட்டாது.

வேதனம்: 18,000.00 மாதாந்த வேதனமாக வழங்கப்படும். ஞாயிறு ஓய்வாகும்.

கடமை நேரம்: காலை 9 மணி–பி.ப. 5.30 வரை (மதிய ஓய்வு உள்ளடங்கலாக)

நேர்முகத் தேர்வு: புதன் 08.05.2013 அன்று பி.ப 5.30 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.

தேர்வுசெய்யப்பட்டால் 3 வருட சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

*175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*

(சி-3231)

**புதிய நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி, யாழ்.நகர்

**O/L Day Class**

பிரிவு II ஆரம்பம்

08.05.2013 புதன் 8.00 மணி

அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P: 0213210815, 021 567 1540

E-mail: Valampuri@yahoo.com

## உதவியாளர் தேவை

வடமராட்சிப் பகுதியில் 80 வயதுடன் நடமாடித் திரியும் வயோதிப மாது ஒருவரது வீட்டில் பகல், இரவு தங்கியிருந்து உதவிகள் செய்வதற்கு 60 வயதிற்குட்பட்ட பொறுப்புக்களற்ற பெண் உதவியாளர் ஒருவர் வேண்டப்படுகின்றார்.

தொடர்பு: 0775340144

(2545)

## வாடகைக்கு விடப்படும்



உடையார்கட்டு தெற்கு

யூதா கோயில் முன்பாக

A-35 வீதியில் அமைந்துள்ள

**கடைத்தொகுதி**


வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0779477870

0777192798

0779479894

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும்

**செல்வன் சின்னராசா உமாகரன்**


கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 06.05.2013 இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டத்தை பெறுவதையிட்டு மனதாரப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று வளமாக வாழ்கவென வாயார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள் : பெரியத்தான், பெரியக்கா (வதனி)

மருமக்கள் – லக்சனா, டிலக்ஸன்

(2543)

## அனைத்தையும் இழந்து நிற்கிறோம், மிஞ்சியது எமது இயற்கை மூலவளமான 'கற்பகதரு' மட்டுமே!





பனை வளம் பெருக்கி வளமுடன் வாழ கூட்டுறவில் நாட்டுயர்வுகாண பனந் தொழில் வல்லுநர்கள் ஒன்றுபட்ட

41 வது வருட உதய நாள்!

(ஸ்தாபிதம்:01.05.1972)



இதனையும் அழித்தால்...?



அடக்குமுறைக்கு அடிபணியாமல் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் கல்வி, கலாசார, பொருளாதார வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் கூட்டுறவுத் தலைவர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் யாவருக்கும் இப்புனித நாளில் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்!

(2535)

**இந்தப் பனை வளம் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லப்போகின்ற அசையாத சொத்து!**



நாளாந்தம் வெட்டித் தள்ளுகிறார்களே!

நெஞ்சு நெருடுகிறது!

எமதருமை தமிழ்பேசும் சகோதர பெருங்குடி மக்களே! தமிழர்தம் தலைவர்களே!

பொறுப்பற்ற வகையில் பனை வளத்தை வெட்டியழிக்கும் கொடிய செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த உழைப்பாளர் நாளில் நாமனைவரும் உறுதிபூணுவோம்!

**பனை வெட்டுவது சட்டப்படி குற்றமாகும்!**

"பனையை நடுவோம், பயனைப் பெறுவோம்"

என்றார் வள்ளல் மில்க்வைற் கனகராஜா

பிரசுரம்:

T.P:00612-98965186

எங்கிருந்தாலும் பனை வளத்துக்காக வாழ்கின்ற

"கற்பகக் காவலன்" க.நடராசா

(பனைசார் நிறுவனங்களின் ஸ்தாபகர்)



முன்னாள் பனை அபிவிருத்தி சபை தலைவர்

(வாழ்த்துச் செய்தி அவுஸ்திரேலியாவில் இருந்து)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட் யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org